ஓம் சுத்த சத்தி

கடவுள் காட்சி

அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை

தத்துவமும்

வில்லுடையான் பட்டித்தல வரலாறும்



ஆக்கியோன்
ஸ்வாமி ஸ்ரீ வளையாபதி சாந்தயோகி

இதன் விலை] 1944 [அணா 12

ஓம்

மகா கணபதி துணை

அருட் சக்தி துதி

கலைமகளே கனிதமிழே
கல்வி முதற் பொருளே!
கன்ய ஒளிவாழ்வு தந்து
கவலை யழித்தருளே!
அலைகடலில் அளிகளூறும்
அருநளினத் தேவி!
அடியருக்கு நல்லசெல்வ
அநுக்ரஹந் தாமேவி!
மலைமகளே மங்களமே
மணிச்சுடரே வருவாய்!
மக்களெம தின்னல்களை
மடிக்க வரம் தருவாய்!
விலையில்லா மாணிக்கமே
விரிகதிரே மதியே!
வித்வநடனம் புரியும்
விண் புவியின் பதியே!

வ ண க் க ம்

“தமிழைப் போற்று, தாய் நாட்டன்பு கொள் அருட் சத்தியைத் துதி” என்று உபதேசம் செய் தருளிய, தேசியகவி ஸ்ரீ சி. சுப்ரமணிய பாரதியார் அவர்களுக்கும், “நாட்டுப் பற்று, பொதுநல ஊழியம், நூலாராய்ச்சி, இதுவே உன் வாழ்க்கையின் தொண்டு,” என்று போதித்தருளிய ஸ்ரீ வ. வே. சுப்ரமணிய அய்யர் அவர்களுக்கும், “இனிய எளிய தமிழில், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எழுதுவது, பிரசாரம், இவை களே உன்னை உய்விக்கும்” என்றருளிய, புதுச்சேரி “தேச சேவகன்” பத்திராதிபர், சைகோன், பழனி, ஸ்ரீ சின்னையா அவர்களுக்கும், “ஆருயிரெல்லாம் ஆண் டவன் மேனி, உடலெல்லாம் இறைவன் நடமிடுங் கோயில், அருட்பணியே அரும்பணி, தமிழன்னைக்குச் செய்யும் தண்பணியே உன் தவம்” என்ற மந்திரங்களை யருளிய, தமிழ் முனிவர் ஸ்வாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதி யார் அவர்களுக்கும்.

வணக்கம் ! வணக்கம் !! வணக்கம் !!!

முன்னுரை

" யான் பெற்றபேறு இவ்வையம் பெறுக "—திருமூலர்
" என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே—"
—வள்ளலார்

" Where the mind is lead forward by thee in to ever widening thought and action in to that heaven of freedom my father, let my country awake " " எங்கு மனம் உன் இடைவிடாத் துணைக்கொண்டு முன்னேறுகிறதோ, அந்த சுதந்திரமய அருட்பெரு வெளியில் என்னப்பனே என் நாட்டுக்கு விழிப்பருள் " (ஸ்ரீ ரபீந்த்ர நாத் தாகூர்—கீதாஞ்சலி) என்ற பெரியார்களின் திருவாக்குகளுக்கிணங்க, என் சிற்றறிவிற் கெட்டியதை, இந்நூல் மூலம் வெளியிட்டிருக்கிறேன், ஆர்வ ஆவேசப்பித்தில் உளறியவைகளில், பிழைகளுளதேல், பொருத்தருளும்படி அன்பர்களை வேண்டுவதுடன், என் வேண்டுகோளுக்கிணங்கி, மனமுவந்து, இதை பார்வையிட்டருளிய தமிழ் முனிவர் ஸ்வாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களின் திருமலரடிகளுக்கு என் மனமார்ந்த என்றும் மாறு நன்றி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்வாமி ஸ்ரீ வளையாபதி சாந்தயோகி.

கடவுள் காட்சி

வித்தில்லையேல் விருட்சம் இல்லை, விருட்சம் இல்லையேல் வித்தில்லை, மூதாதையர் இலையேல் நாமில்லை, ஆகலின் ஏதோ ஒன்று ஆதிசக்தியா யிருந்து கொண்டு உலகை ஆக்கி அளித்து அழிந்து முத்தொழில் களை ஆற்றிவருகிறது, அவ்வாதிசக்தியே கடவுள், அது இல்லாத இடமில்லை, எங்கும் பரந்து இன்னொளி வீசுகிறது, "அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து விளங்குகிறது" தாயுமானுரின் பொன்மொழியில், "உலகெலா முணர்ந்தோதற்கரியவன்" என்றுர் சேக்கிழார். "உலகம் யாவையும் தாமுளவாக்கும், அலகிலா விளையாட்டுடையான்" என்றுர் கம்பர் "அல்ஹம்துலில்லா ஹிரப்பில் ஆலமீன், "ஸர்வலோக நாயகன்" என்றுர் நபிநாயகம் "ஸர்வம் பிரஹ்மமயம் ஜகத்" "ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்" ஸர்வம் சிவமயம் ஜகத்" என்று அந்தந்த மதப் பெரியார்கள் கூறுகின்றனர். "எல்லாம் வல்ல தேவனை வழிபடுங்கள்" என்றுர் இயேசு. அவர் எங்கும் நிறைந்த ஏகப்பரம்பொருள் என்பதை,

"தேமினிய குயிலே கெட்டியேல்
எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ,
ஏழினுக்கப்பால்......
சோதி மணிமுடிசொல்லில்சொல்
இறந்து நின்றதொன்மை
ஆதிகுண மொன்று மில்லான்
அந்தமிலான் வரக்கூவாய்" என

மணிவாசகப் பெருந்தகையார் மகிழ்ச்சியாய்க் கூறுகிறார்.

“ ஓசையொலி யெலாம் ஆனாய் நீயே!
உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே!
வாசமலரெலாம் ஆனாய் நீயே!
மலையான் மருமகனாய் நின்றாய் நீயே!
பேசப்பெரிதும் இனியாய் நீயே!
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே!
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே!
திருவையாறகலாத செம்பொற் சோதி!” அப்பர்

இத்துணை அருமையான கடவுளை எவ்விடத்தும், எக்காலத்தும் நாம் வழிபட்டுய்யவேண்டும். மெய், வாய், கண், மூக்கு செவி, என்ற ஐம்புல ஆறுகளை பக்தி வெள்ளத்தில் பாய விட்டால், செம்பொற் சோதியாம் கடவுள் காட்சி ஏற்படும், எல்லாம் வல்ல கடவுளை ஏற்றிப் போற்றி செய்யும் போது வரும் இன்பமே பேரின்பம், பேசப்பேச, நினைக்க நினைக்க, இனிப்பது கடவுள் நாமம், கடவுளை நாவாரத் துதித்துப் பாவாரம் சாற்றிய பல பேரறிஞர்களின் அனுபவம் அது!

“ காயெலாங் கனியென கனிவிக்குமொரு பெருங்
கருணையமுதே யெனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட வற்புதக்
காட்சியே கனகமலையே
தாயெலா மனையவென் றந்தையே யொருதனித்
தலைவனே நின்பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட வறிந்திடச்
சார்கின்ற தோறுமங்தோ

வாயெலாந் தித்திக்கு மனமெலாந் தித்திக்கும்
மதியெலாந் தித்திக்குமென்
மன்னியமெய்யறி வெலாந்தித்திக்கு மென்னிலதில்
வருமின்பமென் புகலுவேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாந்
தோன்றிட விளங்குசுடரே
துரியவெளி நடுநின்ற பெரிய பொருளேயருட்
ஜோதி நட ராஜகுருவே"

எனப் புகழ்ந்த வடலூர் வள்ளலார், "பார்த்தாலும் நினைத்தாலும், படித்தாலும், படிக்கப்பக்க நின்று கேட்டாலும், பரிந்துளுணர்ந்தாலும், ஈர்த்தாலும, பிடித்தாலும, கட்டியணைத்தாலும், இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக்கரும்பு," என்றும்,உணர்ச்சிவேகத்தையும் ஆவேசப் பெருக்கத்தையும், கடவுளின்பத்தில், காட்டி, நம்மைக் காந்தம் போல் இழுக்கிருர்!

உலகுக்கே ஒன்ருய்நிற்கும் அச்சக்தியாது? அதன்உருவம் என்ன? விரிவு எப்படி? வேத சாத்திர, புராண, இதிகாசத்தில் கூறப்படுவதா? தலங்களிலிருப்பதா? இம்மாதிரி பலபல ஆராய்ச்சிகள்! எல்லாவற்றிலும் இருப்பது அது தான், அது ஒன்றே! ஆயின் விரிவு பல! "எவரெவர் எங்தெந்த ரூபத்தில் என்னை வழிபடுகிருர்களோ? அவரவர்களுக்கு அந்தந்த ரூபத்தில் காட்சி யளிக்கிறேன்" என்கிருர் கிருஷ்ண பரமாத்மா, கீதையில் மஹாத்மா காந்தியடிகள் அருளியதுபோல், ஒருவர் காட்டிலும், ஒருவர் தனி வீட்டிலும், ஒருவர் விக்ரஹத்தின் முன்னிலையிலும், கடவுளைத்தொழுகின்றனர், அது அவர்வர்கள் மனோதத்துவ உறுதியின் போக்கு, ஒருவரையும் நாம் குறை கூறக் கூடாது ஏனெனில், அவரவர்கள் தொழுவது கடவுளையே!

அக்கடவுளை ஒரு நிலை மனதுடன் தொழவேண்டும். இதற்காகவே கோயில்! கோயில் என்பதும், ஆலயம் என்

பதும் ஒன்றே, கோ=பசு, இல்=வீடு, ஆ=பசு, லயம்= இருப்பிடம், பசு எப்படி வயிராற மேய்ந்து ஓரிடத்தி லிருந்துகொண்டு அசை போட்டு நல்லதைக்கிரகித்து கெட்டதைத்த ள்ளுகிறதோ, அதுபோல் உலகமாயையில், நாம் செய்த கெட்டதைத் தள்ளி நல்லதை மேற்கொண்டு, விருத்திமார்க்கத்திற்கேகவே கோயில், பசுவாகிய நாம், பதியிடம் சென்று, நம்மை நிறை பெறச்செய்து கொள்ளவே, ஆலயம் போவது, ஆலயத்தின் தத்துவங்களை ஆராய்வாம்!

கோபுரம்

கோபுரம் உயரமாயிருப்பதற்குக் காரணம், நாம் எங்கு சென்றாலும், உயரமான கோபுரம் கண்களுக்குத் தெரியும்போது கடவுள் இருக்கிறார் என்ற ஓர் ஞாபகம் உடனே ஏற்பட்டு, கடவுள் நினைப்பை உண்டாக்குகிறது !

கோபுர வாயில்

இது அகலமானது, மனத்திலுள்ள தீய எண்ணங்களை நீக்கி, கோபுர வாயிலைப்போல் தாராளமாக நம் மனதைத் திறந்து காண்பித்தால், கடவுள் நம உள்ளத்தில் குடி கொள்வார் !

பலிபீடம்

ஆணவம், மாயை, கன்மம என்ற மும்மலத்தையும் ஒழித்து, மண், பெண், பொன் என்ற மூவாசையையும் இங்கு பலியிடல் வேண்டும்.

துவிஜஸ்தம்பம் கொடிமரம்

" நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா !
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு...... "

என்றார் அப்பர்,

" ஒரு நெறியை மனம் வைத்து உணர் " என்றார் சம்பந்தர்,

ஆதலில் கொடி மரம் எப்படி ஒரு நிலையுடன் நிற்கிறதோ, அதுபோல் மனத்தை ஒரே நிலையில் நிறுத்தி

" அஸதோமா ஸத்கமய
தமஸோ மாஜ்யோதிர்கமய
ம்ருத்யோமா அம்ருதம் கமய "

" From Falsehood lead me to truth "
From immorality lead me to morality
From darkness lead me to light "

" என் பொய் யொழித்து உளம் மெய்யில் நடாத்துக
என் இருள் ஒழித்து அறிவு ஒளியில் நடாத்துக
என் பிறப்பொழித்து பேரின்பத்தில் நடாத்துக "

என்ற தியானத்துடன், அருளாகிய நந்தி யம் பெருமானின் இரு கொம்புகளாகிய இடகலே, பிங்கலே நடுவே நோக்கி ஞல் அருட்பெருஞ் ஜோதி இறைவனின் ஆனந்தக் காட்சி ஏற்படும் !

விநாயகன்

அணுவையும் அண்டத்தையும் ஆட்டி வைக்கும் துதிக்கை ! ஆக்கல், அழித்தல், அளித்தல் முத்தொழிலேச் செய்யும் மும்முக மூர்த்தி, மண், விண், தீ, நீர், காற்று, ஐந்து பூதங்களும் ஐங்கரம், எளியார்க்கு எளியன் நுண்ணி யன், எல்லாம் அவன் வயிற்றிலடக்கும் ! மும்மலத்தையும், ஐம்புலன்களேயும் அழித்தொடுக்க அவனேச் சரணடைய வேண்டும்.

சுப்பிரமணியன்

முருகன் ! அழகன்! எழில்வேள்! நாதாந்தம், போதாந் தம், யோகாந்தம், வேதாந்தம், கலாந்தம், சித்தாந்தம், ஷடாந்தமும் அவன் முகங்கள் ! மூலாதாரம், ஸ்வா திட்டானம், மணிபூரகம், விசுத்தி, அனுகதம், ஆஞ்ஞை, ஆறு ஆதாரங்களும் அவன் முகங்கள். த்வாதசாந்த நிலே, அவன் திருக்கரங்கள், அறிவு ஒளி இரு பாதங்கள் வாழ்க் கையை உண்டாக்குபவள், தெய்வயானே, இச்சாசக்தி !

வாழ்க்கையைத் தூய்மையாக்கித் துணைபுரிபவள் வள்ளி, க்ரியாசத்தி! வேல் ஞானசத்தி! உலகை மயக்கும் மயி லாக இருக்கும் மாயை அவன் வாகனம், அஞ்ஞான இரு ளில் வாடாது ஞான சூரியனாகிய என் தலைவன் முருகனைப் பணிந்து நற்கதிக்கு வர எழுங்கள்! என்று அவனுடைய கொடியில் கோழி கூவுகிறது.

திருமால்

"நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடு நின்ற நடு" உலகரட்சகன் தர்மம் ஓங்கி உலகம் கடவுள் பக்தியில் சிறக்கவேண்டுமென, சங்கநாதம் செய்பவன், தர்மம் குலைந்து தெய்வ பக்தி குறைந்தால், சக்ரத்தை விட்டு அழிப்பவன், துஷ்டர்களுக்குக் கோதண்டத்தையும், சிஷ்டர்களுக்குத் தாமரைப்பூப் போன்ற மேனியையும் காட்டுபவன்.

பிருஹ்மன்

எல்லாவற்றிலும், எங்கும், எத்திசைகளிலும், இருந்து இயக்குபவன்,

சிவன்

ஐந்து பூதங்களும் நான்தான், எல்லாரையும், எங்கும் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தசநாடிகளும் இன்ன முதூற என்னைப்போற்று! ஐம்புலனை அடக்கு! எனது ஐந்து சிரங்களும், பத்துக்கரங்களும், உன் அகத்தில் குடி யிருக்கும்.

சத்தி

இதோ என்பாதம் சரணடை, அபயம் உனக்கு, அஞ்சாதே!

இம்மாதிரி ஒவ்வொரு விக்ரஹங்களுக்கும் தத்துவார்த் தங்கள்; விரிக்கிற்பெருகும்! எந்த விக்ரஹத்தையும், எந்தப் பொருளையும், எங்கு கண்டாலும், ஒரு நிலைமனதுடன், ஒரே உருவத்தை பிடிக்கவேண்டும், எல்லாப்பொருள்களி லும், அந்த ஒரே உருவத்தின் உன்னத நினைவை வைக்க

வேண்டும். "ஆலயங்தொழுவது சாலவு நன்று" என ஔவையார் அருளியபடி மனத்திற்கு ஒரு நிலை ஈய்ந்து ஞானக் கண்ணை திறக்கச்செய்ய ஆலயமே அஸ்திவாரம்!

"நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாற்றியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லு மந்திரமேதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவங் கறிச்சுவையறியுமோ"

என்று பாடிய பெரியாராகிய சிவவாக்கியரும், ஆலயத்தால் தான் நல்வழிபெற்ருர் என்பதை,

"பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்க ளெத்தனை
பாழிலே செபிதது விட்டமந்திரங்க ளெத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள்சூழ வந்ததெத்தனை,
....
"அண்டர்கோன் இருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள்
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே!"

இந்தப்பாட்டுக்கள் நன்குவிளக்குவதுடன்கடவுளைக்கண்ட கண்ணியர்கள் தவிர, மற்றவர்கள் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறது. ஆலயம் சென்று ஒரு நிலைக்கு வழி தேடி. நம் ஹிருதயத்தைக் கடவுள் இல்ல மாகச் செய்யவேண்டும், இது பற்றியே, கிறிஸ்து வேதத்தில் "ஏசுவே என் கனிந்தஹ்ருதயமே" என்ற பெரியார் வாக்கு மிளிர்ந்து, ஓதப்படுகிறது! ப்ரஹ்மா, பெரியதா? விஷ்ணு பெரிதா? சிவன் பெரிதா? இம்மாதிரி பெரிது, சிறிது, ஆராய்ச்சி, ஜாதி மதங்களில் அதிகம், நமது இந்து சமுகத்தில், பெரிய விசாரணைகள் பல! படைப்பவன், காப்பவன், அழிப்பவன், தொழிற் கடவுள் பலர், ஒவ்வொரு உத்தியோகஸ்தரிடம் சிபார்சு பெற்று மேல் பதவிக்குப் போக இது படிகள்! எல்லாவற்றையும் ஆட்டி வைப்பது ஒரு சக்தி! அச் சக்தியே கடவுள்!

" ஒரு பிரமனண்டங்களடிமுடிப் பெருமையே
உன்னமுடியாவவற்றின்
ஓராயிரங்கோடி மாலண்ட மரனண்டம்
உற்ற கோடா கோடியே
திருகலறு பலகோடி யீசனண்டஞ்சதா
சிவவண்ட மெண்ணிறந்த்
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தஞ்
சீரண்ட மென்புகலுவேன்
உருவுறுமிவ்வண்டங் களத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு வணுக்களாக
ஊடசையவவ்வெளியி னடுநின்று நடனமிடும்
ஒரு பெருங்கருணையரசே
மருவியெனையாட் கொண்டு மகனுக்கியழியா
வ்ரந்தந்த மெய்த்தந்தையே
மணிமன்றி நடுநின்ற வொரு தெய்வமே யெலாம்
வல்ல நடராஜபதியே"

என்று வள்ளலாரும், மூவராலும் அறியொணுத முதலாய வானந்த மூர்த்தியான்" என்று மணிவாசகப் பெருந்தகையாரும் கூறுவதால், அந்த மாபெருஞ் சத்தியின் விரிவே பல படிகள், இப்படிகளின் மூலம் அம்மாபெருஞ் சத்தியை நாம் காணவேண்டும்! அப்படிக் கண்டு இன்புற்ற பெரியார் பலர், அவர்ளின் இன்பமொழிகளை இனிது ஆராய்வோம்.

" பண்ணேனுனக் கானபூசை யொருவடிவிலே
பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமலரெடுக்க மனமு
நண்ணே னலாமலிரு கைதான்குவிக்க வெனில்
நாணு மென்னுளநிற்று நீ

நான் கும்பிடும் போதரைக் கும்பிடாதலால்
நான்பூசை செயல்முறையோ
விண்ணே விணுதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேயவ்வித்தின் முளையே
கண்ணே கருத்தே எண்ணே எழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நர்த்தமிடு
கருணுகரக் கடவுளே ''

என்று தாயுமானுர், ஏற்றிப் போற்றி எங்கும் நிறைந்த கடவுளின் தன்மையை இனிது விரிக்கிருர் ! இதனுலேயே பல பெரிய மஹான்களும், கவிகளும், இயற்கை யெங்கும் கடவுள் காட்சியைக் கண்டு இன்பச் சொற்றேன்மாரி பொழிகிருர்கள்.

"கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல் கனிந்தகனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்றவரசே என்னலங் கலணிந்தருளே !''

என மரம், மண், நீர், காற்று, மலர், நிழல், முதலிய எல்லா வற்றிலும், இயற்கைக் கடவுளின் இன்ப எழிலைக்கண்டு இசைக்கிருர். ஸ்ரீ இராமலிங்க ஸ்வாமிகள்! இன்னும் பாட்டுக்கொரு புலவரான பாரதியார் "காயிலே புளிப்ப தென்ன கண்ணபெருமானே ? கனியிலே இனிப்பதென்ன கண்ண பெருமானே ?'' என்று கடவுளின் சுவை ரூபத்தை

விரித்து விரித்து மகிழ் வெய்துகிறுர்! தமிழ் முனிவர் ஸ்வாமி சுத்தானந்த பாரதியாரோ?

"காலேமலர்த் திருமுகத்தில் கருணேயமுதீந்தாள்
கத்துகுயி லோசையிலே பத்தியங்கள் படித்தாள்
சோலேமலர்ப் பொலிவினிலே சொக்த நகைபுரிந்தாள்
சுரும்புகளின் பாட்டினிலே சுருதி எனக்கீந்தாள்"

என்று சூரியனேயும், மலரையும், குயிலின் குரலேயும் வண்டுகளின் ரீங்காரத்தையும், அருட்சத்தியின் வடிவாய்க் காட்டுகிறுர்! திரு. வி. கலியாண சுந்தரப் பெரியாரும் "மணியருவி முழவொலியாய் வண்டிசைக் கும்பாட்டாய், மயில் நடமாய்க்குயில் குரலாய் மலர் மணமாய் வந்தே, அணே மந்த மாருதமாய் ஐம்புலனில் ஒன்றி................." என்ற பாக்களால் நமது உள்ளத்தை இன்பவெள்ளத்தில் விளேயாடச் செய்கிறுர்! ஆகவே, கடவுள் எங்கும் நிறைந்த ஒளிப்பிழம்பாகிய அருட்பெருஞ் ஜோதி! இவ்வருட்பெருஞ்ஜோதிக் கடவுளுக்கு ஓர் உதாரணம் சூரியன்! சூரியன் என்று சித்தாந்தப்படுத்தவில்லே, உபமானமாக எடுத்துக் கூறப்படுகிறது! ஏனெனில்? "சந்திர சூரிய ரொளிபெற விளங்குந் தனியருட் பெருவெளித் தலத்தெழுஞ்சுடரே......" என்ற அருட்பாவிற்கிணங்க சந்திர சூரியருக்கும் ஒளி கொடுக்கக்கூடிய பேரொளியே அருட்பெருஞ்ஜோதி! கடவுள் "ஜோதிமயம்" என்ற ஒரு நிலேயைக்கொண்டு, நம் நாட்டில் சூரிய நமஸ்காரம் நடந்து வருகிறது! ஸ்ரீ வான்மீகி ராமாயணத்தில் சூரியனின் பெருமை "ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரம்" என்ற இடத்தில் விளக்கப்படுவதைக் காணலாம், ராமர் ராவணனேக் கொல்லமுடியாது திகைத்து யோசனே செய்கையில், அகத்திய முனிவர் வந்து "தன்னுடைய ஒளியால் உயிர்களே ஆக்குபவனும், தன்னுடைய வளர்ச்சியால் உயிர்களுக்கு ஆயுள் அளிப்பவனும், தன்னுடைய போக்குவர

வால் உயிர்களை அழிப்பவனும், ஆன முத்தொழிலைச் செய்யும் முழுமுதற் கடவுளாம் சூரியனைத் துதித்து, ராவணன் மேல் பாணம் விட்டால், ராவணன் இறப்பான் என்றுகூற ராமனும் அவ்வாறே செய்து முடித்தானும், வடமொழி ஸந்த்யாவந்தனத்தில், காலையில் துதிக்கும்போது "ஸூர்யஸ்சமாமன்யுஸ்ச......" என்று ஆரம்பிக்கும் மந்திரங்களையும், மத்தியானத்தில் "ஆப்ரஜ்யாவா ப்ருதிவீம் அந்தரிக்ஷம் ஸூர்ய ஆத்மா......" என்று ஆரம்பிக்கும் மந்திரங்களையும், மாலையில் "அக்னிஸ்ச மாமன்யுஸ்ச........" என்பதையும், "இமம்மேவருண" என்பதையும் கூறி சூரிய நமஸ்காரம் செய்கின்றனர்! தேவாரத்தில் "சோதிவானவன்" என்றும், திருவாசகத்தில் "பரிதிவாழ் ஒளியாய்" என்றும், திருவருட்பாவில் "மேருமலை உச்சியில் விளங்கு கம்பநீட்சி" என்றும், பட்டினத்தடிகள் ஞானத்தில் "ஆதித்தன் சந்திரன்போல வெளிச்சமதாம்பொழுது" என்றும், திவ்யப்ரபந்தத்தில் "நீரகத்தாய் நெடுவரையினுச்சிமேலாய்......" என்றும், "வையம் தகளியாய் வார் கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காக, என்றும், மஸ்தான் சாகிபு அவர்கள் பாடலில், "சோதியாய்ச் சொரூப ஞான சுடரொளித்தீபமாகி......" என்றும், டெஸ்க்கி வீரமாமுனிவர் தமிழ்ப்பாக்களில், "திறக்கடல் நீயே திருக்கடல் நியே் திறந்து உளம் ஒளிபட ஞான......" என்றும் ஆங்கிலத்தில் "Heavens light is our birth" அருளொளியே நம் சிருட்டி என்றும், ரபீந்திரநாத் தாகூர் கீதாஞ்சலியில், "Light! my light! The world filling light! The eye kissing light! The heart sweetening light! Ah my Darling! The light dances in the centre of my life!" ஒளி! என் ஒளி! உலகம் நிறை ஒளி! கண்கள் முத்தமிடும் ஒளி! மனமினிக்கும் :—.

ஒளி, ஆ! என் அன்பே! என் உயிரில் நடமிடும் சோதிச் சுடரொளி! என்றும், சூரியனை உவமைப்படுத்தியும், தனிப்பட்ட முறையிலும் கடவுளை சோதியாய்த் துதித்துக் கூறுகின்றனர்

" அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்

' முதற்றேயுலகு " என்றார் வள்ளுவர். ஆதலின் எப்பொழுதும் கடவுள் துணையைக் கொள்ளவேண்டும். எல்லாம் கடவுளால்தான்! ஆதலினலன்றோ " அவனன்றி ஓரணுவும் அசையாது " என்றார் தாயுமானார். " நான் எப்படி யுத்தம் செய்வேன் என்று தயங்காதே! என்மீது பாரத்தைப்போடு, எல்லாம் நான்தான்! என்னைத் துதித்துப் போர்செய்! கொல்லுகிறவனும் நான்! கொல்லப் படுகிறவனும் நான் " என்று தம்முடைய விஸ்வரூபத்தைக் காட்டி அர்ச்சுனனைத் தேற்றினர். கிருஷ்ண பரமாத்மா! " ஸுப்ஹானகல்லா ஹும்மவபி ஹம்திக வதபார கஸ் முகவத ஆலாஜத்துகவலா இலாஹ கைருக ',= உன் பேரைச் சொல்லி உன் புகழ்பாடித் துதிக்கிறேன் என்ருர். நபிநாயகம். " பிதாவுடைய இஸ்பிரித சாந்துடைய நாமத்தினலே " என்று ஆரம்பிக்கிறது கிறிஸ்துவ வேதம். " Trust in God and do the right " கடவுளை நம்பி நல்லது செய் என்கிறது ஆங்கிலமொழி. பொன் ஒன்று நகைகள் பல! பருத்தி ஒன்று ஆடைகள் பல! அதுபோல் மதங்கள் பல! தொழுதல் கடவுள் ஒருவரையே! விரிவுகள் பல கடவுள் ஒன்றே!

விநாயகர், சுப்பிரமணியர், திருமால், காளி, முதலிய விக்ரஹங்களையோ சூரியன், வேல், சூலம், முதலிய பொருள்களையோ, நபிநாயகம், இயேசு, புத்தர், ராமலிங்கம், ஆண்டாள் போன்ற, பெரியார்களையோ துதிக்கும்போது அதை அக்கண்ணல் சிறிது நேரம் ஒரு நிலைமனதுடன் தியானிக்கவேண்டும். நண்பரையோ? சுற்றத்தாரையோ?

பார்க்கிறோம், அவர்களைப்பற்றி எங்காவது நினைக்கும் போது அவர்கள் உரு நம்மனக்கண்ணில் விளங்குகிறது. அதுபோல் கடவுள் ஒன்று என்ற உறுதியான கொள்கை யுடன் ஏதாவது ஒன்றைப் பற்றுங்கள், பற்றின ஒன்றையே எல்லாவற்றிலும் காணவேண்டும். அதுவே அது! உல கெங்கும் ஒளிவீசி நிற்பது ஒன்றே! அருட்பெருஞ் ஜோதி சக்தியின் நாட்டம் அகில உலகதநின் ஆட்டம்! சூரிய னுடைய சலனமே நடராஜ நடனம்! அந்த சலனத்தைக் காண சிலர் சூரியனைக் கண்டு கண்டு கண்ணைக் குருடாக் கிக்கொள்வது பிசகு! அந்த நடனத்தை. எந்தப் பொருளைக் காண்கிறோமோ அந்தப் பொருளின்மீது கருத் தைச் செலுத்தி எல்லாம் அதன் நடனமாகக்கொண்டு, ஒரு நிலையான மனதில் நிறுத்துவதே யோகம்! அதுவே நம் ஞானக்கண் ஒளி பெறும் வழி! "கண் களிக்கப் புகை சிறிதும் காட்டாதே புருவக் கலை நடுவே விளங்குகின்ற க்ற்பூர விளக்கே...!" என்றும் "கையற விலாது நடுக்கண் புருவப் பூட்டு" என்றும் யோக மார்க்கத்தில் ஒரு நிலை மனதில், இரு கண்விழிகளையும் சேர்த்துப் புருவ மத்தியில் வைத்துத் தியானித்துக் கடவுளுருவான திருவருட் பிர காச வள்ளலார், ஞானக்கண்பெறும் வழியை நன்கு புலப்படுத்தி, ஷடாந்தசமரஸ சுத்த சத்திய சன்மார்க்கத் தின்மூலம் கடவுள் காட்சியைக் கண்டு, அருட்பெருஞ் சோதியின் தனிப்பெருங் கருணைக்கு நம்மைப் பாத்திர ராக்குகிறார்; முதலில் ஒரு கண்ணாடியை முன்னே வைத்துக்கொண்டு, நம் உருவை நாமே பார்த்து, கண் ணாடியுள் உள்ள கண்ணை நாடி, ஆத்மவிசாரணைபுரிய வேண்டும், பிற்பாடு சிறிது சிறிதாக வாசியை நம் இயற் கைக்குத் தக்கவாறு நிறுத்தி, புருவ மத்தியில் நோக்கத் தைச் செலுத்த வேண்டும். பத்து வேளை மருந்தை ஒரே வேளையில் புசித்தால் நோய் நீங்கிவிடும் என்ற குருட்டு யோசனை செய்யும் நோயாளியைப்போல் அவசரப்படக்

கூடாது! தீங்கு நேரிடாத முறையில் மெதுவாகப் பழக வேண்டும், புருவ மத்தியில் விழிகளைச்சேர்க்க சிறிது சிறிதாக முயல வேண்டும். ஆத்திர அவசரம் பலனைத்தராது. கடவுள் என்ற ஞாபகம் சதா இருந்து கொண்டிருத்தலே மிகமிக நன்மை பயக்கும்.

“இட. பிங்கலயோர் மத்யே சுஷும்னு
ஸூக்ஷ்மரூபிணி”

என்று கீதை யோக மார்க்கத்தைக் கூறுகிறது.

“சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது” என்ற தாயுமானர் “சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வத்திடமே முறையிடுகிறார். ஆதலின், மனதை ஒரு நிலைப்படுத்தப் பழகவேண்டும் “நான்! நான்!. என்ற அகந்தையைஅறவே ஒழிக்க வேண்டும்” என்பது பல பெரியார்களின் உபதேசம்! “தன்னை யறிந்தின்பமுற வெண்ணிலாவே” என்றார் வள்ளலார், தன்னை மறந்தின்பமுற்றால், தன்னையறிந்தின்ப முறலாம், பிறகு வள்ளலார் சொல்லியபடி இராப்பகலில்லா விடத்துக்குப் போகலாம். அவர் கூறியபடி அவ்விடத்திலிருக்கிற கடவுளை எண்ணி எண்ணி வாடினால் பலனுண்டு. தன்னை மதியா திருத்தலே தவம்! மணிவாசகப் பெருந்தகையார் “சிறு நாயினுங் கடையேன்” என்று கூறிக் கொள்வதை பின்பற்ற வேண்டும், கடவுள்! உள்ளத்தைக்கட! கடவுள் காட்சிக்கு, தன்னைதான் அறிதல் வேண்டும்! தன்னை அறிந்தவன் விவேகி, அதை உலகுக்குச் சொல்லி சந்தோஷப்படுகிறவன் ஆனந்தன், இதுவே ஸ்வாமி விவேகானந்தா என்று வழங்கும் பொற் பெயர்.

“உருளுங்கண்விழிகளையே ஒதுக்கிடு புருவஇடை
மிரளாமைலோர் நிலையில் மெதுவாக த்யானித்தாலே
திரளுமோர் செம்பொற்சோதி திகழுமே குகனின்சத்தி
அருளுடை விஞ்சை மந்த்ர அற்புத யோகமதால்”

“ மண்டல நினைவைத் தள்ளிமௌனமார் யோகத்தாலே
விண்டலத்தலைவரேறை விருப்புவிடாமல் எண்ண
குண்டலிநாத மோங்கி குளிர்மயில் வாகனருள்
கொண்டிடும் மனிதராவோம் கொண்டாட இப்புவியே”

என்று யோகத் தெய்வமாகிய சுப்ரமண்யரின் தத்துவம் தெரிவிக்கிறது, அதுவே நமக்கு நல்ல இடம் தருகிறது, அதுதான்,

“ ராப்பகலில்லாவிடம் ரம்மியம் பொங்குமிடம்
சாப்பாடு தவிர்த்தஇடம் சாஸ்வதமான இடம்
தாப்பாள்களில்லாவிடம் தமிழ் நடம்புரியுமிடம்
கூப்பாடு போடாமலே குடியேறு யோகத்தாலே ”

மோன யோகத்தின் ஏகவெளி ! இந்த அருட்பெரு வெளியில் ஆனந்த வாழ்க்கை நடத்துவதே யோகம் !

“ நாதசங்கிதப் பொன்மணி மண்டபம்
நயனத்திடை நடுவில் நடனங்கண்டேன்,”

இதுவே யோக அனுபவம் ! யோகிகள் கைக்கட்டை விரல் முனையையும் ஆள்காட்டி விரல் முனையையும் ஒன்றுபட வைத்திருப்பார்கள், இந்த விரல்களிடையே அவர்கள் அருட்பெரு வெளியைக் காண்பார்கள் ! கோயிலில் தேங்காயுடைப்பது ஏன் ? அநேக காலம் யோகிகள் குண்டலியனலால் சிரசில் அமுதூற, அவ்வமுது அண்நாக்கிலிருந்து உண்நாக்கில் சொட்ட, அருளமுதுண்டு “ நிச்சலும் பேரானந்த நித்திரை செய்கின்றேனே ” என்ற வள்ளலார் வாக்கின்படி, பத்திரகிரியாரைப்போல் “ தூங்காமல் தூங்கி சுகம்பெறுவார்கள், இதையே

“ நாவை மடக்கியே மேல்வாசல்
நளினமது வருந்த அருள்வாயே ”

எனப்பாட்டால் கூறினர், ஞானவேலன், ஞானசக்தி ! ஞானக்கண் ! என்ற பேருடைய அருட்பெருஞ்ஜோதி உத

யத்தைக் கண்டதும் "சுத்த அற்புததசவிதநாதம் தொனிக்கும் சுதிலயத்துடன்" தேங்காயைப்போல் மனத்தை வெள்ளையாய்த் தூய்மையாக்கு! இளநீரைப்போல் அருளமுதம் அளி! மணியடித்தல்:—அறிவாகிய நாக்கு கடவுள் ஞாபகம் வர மனத்திலடிக்கிறது. கற்பூர தீபாராதனை:—கற்பூரம் எரிந்த பிறகு ஒன்றுமில்லை, அதுபோல் சுத்த சூன்யமான உலகில் ஒன்றுமில்லை, கற்பூரம் மறைந்ததுபோல் கடவுளிடம் சோதியுருவாய் ஈரறக்கல! "முடிசார்ந்த மன்னரும் பிடிசாம்பராவரென்பது திண்ணம்" என்பது பட்டினத்தடிகள் வாக்கு. தேகத்தை வெறும் சாம்பலாக்காதே, உடல், பொருள், ஆவி, மூன்றையும் கடவுளுக்கே பந்தனம்! என்ற நினைவுடன் நீறணிதல். இடகலை பிங்கலை வழியாய் வாசியை ஏற்றினல் நடுவே செம்பொற் சோதி உதயம், அதுவே திருநாமம். ஞானக்கண் உளது அதுவே திலகம். ஒவ்வொன்றும் நம்முள்ளே இருக்கிறது. நாம் நடமாடுங்கோயில், அதுபற்றியே பெரியார்கள் பின்வருமாறு கூறினர்!

"தேடிக்கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத் தேவனை
என்னுள்ளே (தே) —அப்பர்

"பால் வண்ணமாகு மருந்து—அதிற்
பச்சை வண்ணமும் படர்ந்த மருந்து
நூல்வண்ண நாடு மருந்து—உள்ளே
நோக்குபவர்களை நோக்கு மருந்து
மூவர்க்கரிய மருந்து—செல்வ
முத்துக் குமாரனை ஈன்ற மருந்து
நாவிற்கினிய மருந்து—தைய
நாயகி கண்டு தழுவு மருந்து (வள்ளலார்)

சக்தியாய்ச் சிவமாகி வரும் சோதிரூப தத்துவம் இது. இக்காலத்தில் இகபரசாதனங்களை எளிதில் அடைய வழி காட்டியவர் வடலூர் வள்ளற் பெருமான் ஒருவரே! பிரம்மசரிய ஆஸ்மத்திலிருப்பவர்களும், இல்லறத்தில் இருப்பவர்களும். துறவறத்தில் இருப்பவர்களும் எல்லோரும் எளிதில் நன்மார்க்கத்தை அடையலாம்! ஒவ்வொரு மனிதனுக்கும் சீவகாருண்யம் அவசியம்! சமரஸத் தன்மை முக்கியம்! வீட்டில் பெண்கள் பதார்த்தத்தில் உப்புப் போடவில்லையானால், வீட்டில் சண்டை வந்து விடுகிறது. அந்தச் சண்டை கூடாது. சமரஸம்வேண்டும். வீட்டில் சமரசத்தைக்கண்டு வெளியில் சமரசத்தைக் காண வேண்டும்! கொல்லா விரதம் குவலயமெல்லாம் மோங்கச் செய்யவேண்டும்! எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்க வேண்டும்! ஆண், பெண், இரு பாலரும் சமரஸ நோக்கிற் செல்லவேண்டும். ஜாதி சமயப்பூசல்போல, ஆண் பெண் உயர்வு தாழ்வுப்பூசல், நம் நாட்டில் அதிகம். பாரதியார் சொன்னதுபோல் "ஆண்களோடு பெண்களும் சரி நிகர்சமானமாக வாழவேண்டும் இந்நாட்டிலே" எல்லோருக்கும் கடவுள் காட்சி ஏற்பட்டு தெய்வீக வாழ்வு வரவேண்டும். எதையும் நன்கு காணவேண்டும். கண்டதில் நன்மை விளங்கக் காணவேண்டும்! அப்பொழுது கண்டவர்களும் விளங்குவார்கள். வடலூர் வள்ளலார் மூன்று மாதக் குழந்தையா யிருக்கும்போது, சிதம்பரத்தில் நடராஜர் சன்னதிக்குப் பெற்றோர் இடுப்பில் சென்றாராம். நடராஜாவைப் பார்த்து குழந்தை சிரித்ததாம். எதற்காகச் சிரித்தது அது நடராஜாவைக்கண்டு, அங்கும் இங்கும் விளங்கிய விளக்கத்தைக்கண்டு பரவசமாய்ச் சிரித்து, பின்னால் அது எந்த விளக்கத்துடன் கண்டதோ அந்த விளக்கத்தை நமக்கு அருட்பா மூலம் விளக்கி விட்டது.

" திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞானநிலை விளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம்பலத்தே
திருக்கூத்து விளங்கவொளி சிறந்த திருவிளக்கே
உருவிளங்க வுயிர்விளங்க வுணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருளுதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்கு மணிப்பொது விளங்க வளர்ந்த சிவகொழுந்தே "

"பாலில் நெய்யினன் ! விரகிற்றீயினன்" என்றார்-அப்பர்.

" திலமத்யே யதா தைலம் க்ஷீரமத்யே யதாக்ருதம்
புஷ்பமத்யே யதாகந்த பலமத்யே யதாரஸ:
காஷ்டா அக்னிவத் ப்ரகாசேத்
ஆகாசே வாயுவச் சரேத் "

" ததாஸர் வகதோ தேஹி தேஹமத்யே வ்யவஸ்திதஹ
மனஸ்தோ தேஹினும தேவோ !
மனோமத்யே வ்யவஸ்திதஹ "

எள்ளுக்குள் எண்ணெய்யாய், பாலில் நெய்யாய், பூவில் மணமாய் பழத்தில் ரசமாய், தீயில் ஒளியாய், ஆகாயக்காற்றாய் எல்லார் மனத்திலும் தேகத்திலும், நான் இருக்கிறேன் என்கிறார் கிருஷ்ண பரமாத்மா ?

அல்லா ஹுஸ்ஸயத்=அல்லா எல்லாரிடமும் இருக்கிறார் என்பது நபிநாயகம் வேதம்

" எத்துணையும் பேதமுறு தெவ்வுயிரும்
தம்முயிர்போ லெண்ணியுள்ளே
ஒத்துரிமையுடையவராயுவக்கின்றார் கடவுள் "

என்பதுவள்ளலார் வாக்கு!

" தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நிதம்
திக்கை வணங்கிடுந் துருக்கர்

கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடுமே சுமதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்

என்று பாரதியார் கடவுள் ஒன்று என்பதை விளக்கு கிருர் !

“ கவாம் அனேக வர்ணனும்
க்ஷீரஸ்யாத் ஏகவர்ணதஹ
க்ஷீரவத் பாதி விஞ்ஞானும்
தேஹினும் சகவாம்யதா ”

பசுக்கள் அநேக நிறம், பால் வெள்ளை நிறம்தான். ஆகலின் எல்லோர்க்கும் கடவுள் ஒன்று ! எல்லோரும் கடவுள் காட்சியைக்கண்டு அருட்பெருஞ்ஜோதியின் தனிப் பெருங் கருணைக்குப் பாத்திரர் ஆகலாம், பிரம்மசாரிகள் தம்முடைய ஒழுக்கத்தால் காணலாம், லாகிரி, காமம், சூது, பொய், வஞ்சனை, இவைகளை வேரறக்களைய வேண்டும் !

“ காதன் மனையாளும் காதலனும் மாறின்றி
தீதில் ஒருகருமம் செய்யவே—ஓதுகலை
எண்ணிரண்டு ஒன்றுமதி என்முகத்தாய் ! நோக்குமால்
கண்ணிரண்டு மொன்றையே காண் ”

என்றபடி இல்லறத்தார்கள், வள்ளுவரையும் வாசுகியையும் போலிருந்து கடவுளைப் போற்றி நல்வழி அடைய வேண்டும்.

தனக்கென இரண்டு காணி, சமாதியடைய ஒரு குழி, சமையல் செய்ய ஆள், முதலியது தேடிக் கொண்டிருப்பது துறவிக்கு லட்சணமல்ல. குழம்புக்கு உப்புக் குறைவு,

பாலுக்குச்சக்கரையில்லை, தலையணையின்றி தூக்கம் வராது. என்று கூறுகிறவன் துறவியல்ல! பற்றற இருப்பவனே துறவி! மாடு கன்று பார்க்க, வயல் தோட்டம் கவனிக்க, சமைக்க, சாப்பிட, விவகாரம் பேச, நேரம் ஏற்படுத்திக் கொள்வதுபோல், ஒவ்வொருவரும் கடவுளைத்தொழ பிரதி தினமும் நேரம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியம். குளிப்பது முழுகுவது, விபூதி நாமம் தரிப்பது, மாலைகள் அணிவது முதலிய டம்பச் செய்கையில் ஒன்றும் பயனில்லை; உள்ளம் சுத்தமானுல் எல்லாம் சுத்தமாகும், மனத்தூய்மை வேண்டும்; கடவுள் தியானம் இருந்தால் எல்லாம் இருக்கும். ஒவ்வொருவரும், தமிழ் முனிவர் ஸ்வாமி ஸ்ரீசுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதிய "திருநூல் அல்லது தூய வாழ்வு" என்பதையும் "யோக சித்தி" என்பதையும் அவசியம் பார்க்க வேண்டியது! ஏனெனில்? எளிய இனிய தமிழில், மனித வாழ்க்கைக்கு வேண்டிய இகபர சாதனங்களை, சுலபமான முறைகளில் பெற்றுய்ய வேண்டிய நெறிகளை அந்நூல்கள் மிக மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றன. இப்பொழுது எழுத்து மூலம் சொன்ன இவ்விரண்டு நூல்களே, என்னுடைய பிரசங்கங்களுக்கிடையே சான்று கூறுவது என்பது அன்பர்களுக்குத் தெரியும், ஆதலின் அதனை ஈண்டும் எடுத்துச் கூறினேம்.

"நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனுமுண்டு
நிதியுண்டு பதியுண்டு துதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையுமுண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையுமுண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்த முறு
உளமுண்டு வளமுண்டு

தேருண்டு பரியுண்டு கரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவுமுண்டு
தேனுண்டு வண்டுறுகடம்பணியும் நின்பதத்
தியான முண்டாயிலரசே
தாருண்ட சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத்துய்யமணி யுண்முகச்சைவமணி
சண்முகத் தெய்வமணியே ! —திருவருட்பா

எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், உலகத்தில் அன்பினுல் பார்க்க வேண்டும். பார்வையில் கருணைத்தும்ப வேண்டும். பார்வையில் ஜீவகாருண்யம் ஒளிரவேண்டும்.

" கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்
சொற்கள் என் பயனுமில " —வள்ளுவர்

" சொல்லு மாடுப கண்ணினுனே " —குறுந்தொகை

" நாட்டம் இரண்டும் அறிவுஉம்படுத்தற்குக்
கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்
—தொல்காப்பியம்

ஊனக்கண்ணுல் ஞானக்கண்ணைப் பார் ! எல்லோரிடத்திலும் கடவுளைக் காண், வாயால் கதறிப் பதறி உளறுவதில் என்ன ? சிறிது நேரமாயினும் ஒரு நிலை மனது வேண்டும். மோன நிலையும் ஒரு நெறி த்யானமும் உயர்வு வுண்டாக்கும். பேச்சில் அன்பு, செய்கையில் அன்பு த்யானத்தில் அன்பு ! அன்பே சிவம் ! இதுபற்றியே

" ஈசனுக்கன்பிலார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
பேசுவதேன் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கிற்
பிறப்பினும் இறப்பினும் பிணங்கிடுவர் விடு நீ

ஆசையோடும் அரனடியார் அடியாரை அடைந்திட்
டவர் கருமம் உன் கருமம் ஆகச் செய்து
கூசிமொழிந்தருள் ஞானக்குறியால் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே !

என்றார் அருணந்தி சிவம். கடவுள் எளியவர்க் கெளியர்.

" நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காதல் தள்ளாற் கம்ம
ஒரு காலல்ல இருகால் நடந்தும்
எளியற் கெளியராயினர் " —குமரகுருபரர்

அவ்வெளியனை எளிதில் அடைய நாம் எளியவராக வேண்டும். இன்பத்திலும், துன்பத்திலும், நாம் கடவுளை த்யானம் செய்தல் வேண்டும். இன்பம் துன்பம் எல்லாம் அவரதே ! அவரைக் குறை கூறுதல் கூடாது !

" தந்தை தாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரினலடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின்னருளேயாகும்
இந்த நீர் முறைமையன்றோ ஈசனர் முனிவு என்றும் "
—சிவாஞன சித்தியார்

ஏற்ற விவை அரனருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்
அணுக்கள் இடர்க்கடனின்று மெடுத்தே
ஊற்றமிக அருள்புரிதலேதுவாக உரை செய்வர்
ஒடுக்கம் இளைப்பொழித்தல் மற்றைத்
தோற்றமலபாகம் வரக்காத்தல் போகந்துய்ப்பித்தல்
திரோதாயி நிறுத்தலாகும்
போற்றலரும் அருளருளே யன்றி மற்றுப்புகன்றவையும்
அருளொழியப் புகலொணுதே ! "
—உமாபதிசிவாச்சாரியார்.

ஆதலின் எல்லாம் இறைபின் திருவிளையாடல் என எண்ணித்தேறவேண்டும். அது பற்றியே,

"உலகமே யுருவமாக யோனிகள் உறுப்பதாக
இலகுபேர் இச்சாஞான கிரியை உட்கரணமாக
அலகிலா உயிர்ப்புலன்கட் கறிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்களோடு நாடகம் நடிப்பன் நாதன்"
என அருணந்தி சிவனார் அருளினர்!

"தந்தயங்கனையார் தங்கள் மேல்வைத்த
தயாவை நூறுயிரம் கூறிட்டு
அத்திலங்கொரு கூறுன் னடிமிசை வைத்திடின்
அமருல களிக்கும் நின்பெருமை''

என்ற கருவூர்த் தேவரின் கருத்துக் கிணங்க கடவுளின் பால் கருத்தைக் சிறிதாவது செலுத்தின் அதுவே நமக்குப் பேரின்பம் பயக்கும், எல்லோருக்கும் பேரின்பபாக்கியம் உண்டு, ஆண் உயர்வு, பெண் தாழ்வு, பெண் உயர்வு, ஆண் தாழ்வு, என்பது கடவுள் சந்நதியில் கிடையாது· மனித வர்க்கத்தில் மனிதரால் ஏற்படுத்தப்படும் நிலையில்லா அற்பச் சட்டம், உயர்வு தாழ்வு என்பது, "ஆணும் பெண் ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையந் தழைக்குமாம்'' என்பது பாரதியார் வாக்கு

"ஆதிபகவன் தனதுடல்தணிப்பான் பணியவல்லிறைவன்
பாதமிறைஞ்சுமதற்கு நெற்றிப் பகையுமல் குற்பகையுமாஞ்
சீதமதியுமரவும் விழியுஞ்செயற்கு முவகை செயாமலில்லை
மாதுபணியு மதற் குமன மகிழுமுமையைப் பணிவாம்''

—பிரபுலிங்கலீலை.

"தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பாலுகந்திலனேற் பேதாயிரு நிலத்தோர்
விண்பாலியோ கெய்தி வீடுவர்காண் சாழலோ"

—திருவாசகம்.

போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
யோகியா யோக முத்தி யுதவுதலதுவு மோரார்
வேகியானுற் போர்செய்த வினையினை வீட்டலோரார்
ஊகியாமூட ரெல்லா மும்பரி லொருவனென்பார் "

—சிவஞானசித்தியார்.

கடவுள் சந்நிதானத்தில் சாதி வித்தியாசம் இல்லை, அச்சந் நிதானத்திற்குப் பாட்டை வள்ளலார் வகுத்த சமரச சுத்த சத்திய சன்மார்க்கம்.

" பயில் புறக்கரண மனைத்தையும் விளங்கு
முட்கரணத்திடைப்படுத்தி
மயலுறு மனனைப்புற்கல னிடத்தி லொடுக்கி
மேல் வயங்கு சட்பாவம்
இயற்று சடுடரங்கோச மோராறு
மியைந்திடாப்புற்கலன்தன்னை
உயர்வுற உயர்ந்த பரம்பொருளதனிற்
கூட்டுதல் யோக மென்றுரைப்பர் "

—காசிகாண்டம்.

" காற்றுலே புவியாலே ககனமதனுலே
கனலாலே புனலாலே கதி ராதியாலே
கூற்றுலே பிணியாலே கொலைக்கருவியாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ்செயல் களாலே
வேற்றுலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும் [கே
மெய்யளிக்கவேண்டுமென்றேன் விரைந்தளித்தானெனக்
ஏற்றுலே யிழிவெனநீர் நினையாதிருலகிர்
எந்தையருட் பெருஞ்சோதி யிறைவனைச் சார்வீரே!"

—திருவருட்பா

"வாதுபேசிய மனிதர்காளொரு வார்த்தைகேண்மின்கள் வந்துநம்
போது போவதன் முன்னரேயருட் பொதுவிலே நடம்போற்றுவீர்
தீதுபேசி னீரென்றிடாது மைத்திருவுளங்கொளுங் காண்மினோ
சூதுபேசிலேன் நன்மை சொல்கின்றேன் சுற்றமென்பதுபற்றியே"

—திருவருட்பா.

"ஸமி அல்லாஹு லிமன் ஹமிதஹ்" ஆண்டவனைப் புகழ்தால் அருளோடு ஏற்றுக்கொள்வான் என்பது நபிநாயகம் பொன்மொழி !

"அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடுதிரியாய்—நன்புருகி
ஞானச் சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ்புரிந்த நான்" —பூதத்தாழ்வார்

என்ற பூசையே உயர்வான வழிபாடு !

வடலூர் வள்ளல் பொற்குணமே !
வாழ்த்தும் வாய்க்கு நன்மணமே !
படரும் ஞானச் சுடரொளியே !
பாட திருவருட்பா மொழியே !
இருட்பெருமாயை வேரறவே !
இறவா நன்நிலை நாமுறவே !
அருட்பெருஞ்சோதி கண்டிடுவோம் !
தனிப்பெருங்கருணை கொண்டிடுவோம் !
வளையாபதியின் வாக்கியமே !
வள்ளலருள்சேர் பாக்கியமே !
சளையா துழைப்போம் வாருங்கள் !
சன்மார்க்கத்திலே சேருங்கள் !
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி !
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி !

மங்களம்

"முத்திநெறி அறியாத" என்ற மாதிரி

கல்மலையும் கனிந்தொழுகும்
கன இரும்பு கசிந்துருகும்
வெல்லரிமா வேங்கைகரி
வியந்துநின்ற நிலைபெயரா
நல்லருட்பா பாடஒன்று
நம்பியுறும் நண்பருங்கள்
தொல்லைகளைத் தொலைத்தருளும்
துங்க ராமலிங்கன்நெறி !
சாவாரைக் கண்டழுமிச்
செகத்திலுள்ள சனத்தீரே
நாவாரத் திருவருட்பா
நந்தமிழைப்படித்துய்மின்
தேவாரத் தேவர்போல
தெய்வமாய் நமையாக்கும்
பாவாரங் கொள்பரத்தின்
பத்தி ராமலிங்கன் சொல்லே !

"தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே" என்ற மாதிரி

அன்னைதந்தை நீரேயென்று வள்ளலாரே !
அண்டிவந்தோம் பாதுகாப்பீர் வள்ளலாரே !
உன்னையறிந் தின்பமுற வள்ளலாரே !
உண்மையொளி தோன்றுதையா வள்ளலாரே !
மகிமை சித்தியுற்றதிரு வள்ளலாரே !
மன்றுள் நடனம்புரியும் வள்ளலாரே !
மகிதலத்தோர் போற்றுமுயர் வள்ளலாரே !
மக்களுக்கின்னுசி கூறு வள்ளலாரே !
இருட்குறைகள் தீர்க்கவந்த வள்ளலாரே !

இன்னருட்பா ஈந்தபெரு வள்ளலாரே !
அருட்பெருஞ்ஜோதிச்சுடரே வள்ளலாரே !
அன்பருள்ளத்தே விளங்கும் வள்ளலாரே !
நல்லதனிப் பெருங்கருணை வள்ளலாரே !
நல்குமுங்கள் திருவருளே வள்ளலாரே !
வல்லவடலூரில் வாழும் வள்ளலாரே !
வளையாபதிப்பாக்கள் சூடும் வள்ளலாரே !

“ ஸத்வகுண போதன் ” என்ற மாதிரி

செல்வநிலை ஈவான் செவ்வருளாளன்
வல்லருட் ப்ரகாச வள்ளலேயருட் (செ)
வடலூரில் நன்கு வாழ் ஞானசபையின்
திடதிருவருட்பா திருவருள் புரிந்தோன் (செ)
சீலத்தமிழ்த்திரு சீவகாருண்யன்
ஞாலத்தோர் போற்றும் ஞானவதாரன் (செ)
சமரச சுத்த சன்மார்க்க சங்கம்
அமரரின் நிலையென அமைத்த பேரறிஞன் (செ)
கொல்லா நல்வ்ரதமே குவலய மோங்க
எல்லார்க்குஞ் சொன்ன எழிலுள சத்யன் (செ)
பசுந்தமிழ் வளையா பதியினின் மாலை
விசுவசித் தேற்று விருப்புடன் சூடி (செ)
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை தத்துவரூபன் (செ)

ஓம் சுத்தசத்தி

எதிர்ப்பாருங்கள்

சமரச அமரர்கள்

ஸ்ரீ சிவ சுப்ரமணியன் சிங்கார லீலே

கூடிய சிக்கிரத்தில் வெளி வரும்

புத்தகங்கள் கிடைக்குமிடம்

ஸ்ரீ மு. து. கிருஷ்ண ரெட்டியார்

கருங்குழி

கூடலூர் தாலுக்கா

தென்னுற்காடு ஜில்லா

ஓம் சுத்த சத்தி

வில்லுடையான்

பட்டித் தலவரலாறு



ஆக்கியோன்

ஸ்வாமி ஸ்ரீ வள்ளியாபதி சாந்தயோகி

ஓம் சுத்த சத்தி

வில்லுடையான் மீது

தமிழ் முனிவர் ஸ்வாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அவர்கள் சூடிய ஒரு பாட்டு

சத்திக்கனலே சமர்செய் பகையைக்
குத்திக்குமுறும் கொதிவேற் கரனே
தொத்தித் தொடருந் துயர்செற்றினிதே
பத்தர்க்கருள்வாய் பரமன்மகனே!

"கடவுள் காட்சி" "வில்லுடையான்பட்டித் தல வரலாறு" என்ற இரு மகுடங்களுடைய இவ்வொரு நூலின் பூரண உரிமையும், இப்புத்தகத்தின் வருவாயும் வில்லுடையான்பட்டி முருகனின் பொற்பாத கமலங் கட்கு அர்ப்பணம்.

வளையாபதி

முன்னுரை

வேலுடையான்பட்டு, வேல்ராம்பட்டு, என்று வழக்கச் சொல்லால் கூறப்படும் வில்லுடையான்பட்டி என்ற தலத்தின் வரலாறு, இதுவரை வெளிவந்ததாக என் ஆராய்ச்சிக்குத் தெரியவில்லை. வில்லுடையான் பட்டி மகிமை வாய்ந்த ஒருதலம். அங்குள்ள முருகன் அவனிக்கு அருள்சுரந்து வருகிறுன். அக்கோயிலுக்கு தற்காலம கௌரவ தர்மகர்த்தராய் இருக்கும் கருங் குழி ஸ்ரீ. மு. து. கிருஷ்ண ரெட்டியார் அவர்களும், முடிகண்ட நல்லூர் அன்பர் ஸ்ரீ மு. ந. சிவ கடாட்சம் பிள்ளை அவர்களும், வில்லுடையான்பட்டி தலத்தைப் பற்றிய விவரங்களை அறிந்து அதை உலகுக்கு எடுத்துக் காட்ட இச்சையுற்றனர்! அவர்களின் விருப்பம் பூர்த் தியாகவும், முழுமுதற் கடவுளாம் முருகனைக் காணவும், வில்லுடையான்பட்டிக்குச் சென்று தங்கினேன்; அது சமயம் எனக்கு அருட்காட்சி ஈந்தருளிய முருகனினடி தொழுது அந்த ஆவேசத்தில் இந்நூலை எழுதினேன், பிழைகளுளதேல் பெரியோர்கள் பொறுத்தருள்க! "கட வுள் காட்சி" "வில்லுடையான்பட்டித் தலவரலாறு" இவ்விரண்டு நூல்களையும் எழுதும்படி ஊக்குவித்து வெளியிட்ட அன்பர்களுக்கு என் நன்றி உரியதாகுக!

அன்பு

ஸ்வாமி ஸ்ரீ வளையாபதி சாந்தயோகி

ஓம் சுத்த சத்தி

வில்லுடையான் பட்டித் தலவரலாறு

காண நல்ல காட்சி ஈயும் அமரேசா
காமனெரி ஈசன் கண்ணின் குமரேசா
நாணல் விளை கங்கை நதி முருகோனே
நாராயணத் தேவன்மகிழ் மருகோனே
பாண வில்லைக் கைப்பிடித்த வடிவேலா
பாவை வள்ளி தெய்வயானை துணைலோலா
வேண வரந்தந்து காப்பாய் செட்டியாரே
வேதன் துதி வில்லுடையான் பட்டியாரே !

வள்ளி திருமணம்

ஸ்ரீ சிவ சுப்ரமணியக் கடவுள். பூவுலகில் வள்ளியைச் சிறையெடுத்துச் சென்றதும், வேடுவர்களுக்குக் காட்சிதந்து திருத்தணிகை மலையில் அமர்ந்ததும், விநாயகருக்கும், நாரதருக்கும் தவிர, மற்றத் தேவர்களுக்குத் தெரியாமலிருந்தது.

கழுகாசலத்தை விட்டுச் சென்ற சிவகுமரனை தினம் கழுகாசலத்தில் சேவிக்கும், பிரம்மா விஷ்ணு சிவன் மும்மூர்த்திகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்தியாதரர், முதலியவர்களும், இந்திராதி தேவர்களும், லக்ஷம் வீரர்கள், வீரவாகு அய்யனுர், வீரன், இடும்பன் முதலிய தேவசேனுபதியின் துணைவர்களும், வேலாயுதனைக் காணுது திகைத்துத்தேடி சிதம்பரத்திற்கு வந்தனர்.

புலன் அகப்படல்

உலகெங்கும் அருளொளி வீசும் ஆனந்த நடராஜன் சன்னதியாகிய சிதம்பரத்தில், அனைவரும் குறைக்கடவுளைக் காணாத வியாகூலத்தால், அழுதுதொழுது கொண்டிருந்தார்கள், துரும்பிலும் தூணிலும் விளங்கும் மாயவன் மருமகன், தன்னுடைய தண்டபாணி அம்சத்துடன் ஒளிரும் விக்ரஹத்தினின்றும் பிரசன்னமாகி " தங்கள் அனைவருக்கும் கூடிய சீக்கிரம் எனது அருட்காட்சியை இத்தலத்திற்கு வடமேற்கே சுமார் இரண்டரைக் காததூரத்தில் தருகிறோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். மற்ற தேவர்களின் களைப்பையும் சோர்வையும கண்ட, இடும்பன், அய்யனார், வீரன் மூவர்களும், அவர்களை விட்டுப்பிரிந்து, ஸ்ரீ சிவ சுப்ரமணியக் கடவுள் எழுந்தருளும் இடத்தைக் கண்டுவர, வாயுவேக மனோவேகமாகப் புறப்பட்டுச் சென்றனர்.

கன்னியார் கோயில்

அல்லது

பூசாரிக் குப்பம்

அவர்கள் சென்றதை அறிந்த மற்றையோரும், அங்கிருந்து அவர்கள் சென்ற திக்கை நோக்கிச்செல்லலாயினர். இரண்டு காதவழி சென்றதும், அங்குற்ற ஓர் சோலையில் தங்கினர். முதன் முதலில், சப்தகன்னியர்கள் அச்சோலையினுள் ப்ரவேசித்து, ஆங்கு தங்கினர். மற்றத் தேவர்களும் அங்கேயே தங்கினர். முதன் முதலில் இந்த சோலைக்குள் கன்னியர்கள் வந்து தங்கினதால் இதற்குக் கன்னியார் கோயில் என்ற பெயர் ஏற்பட்டது. (பின்னர் இங்கிருந்தே இவர்கள் முருகனைப்

பூசித்ததால் பூசாரிக் குப்பம் என்ற பெயரும் உண்டா யிற்று) இவ்விடத்தில் ஆதிசத்தியாய் வீற்று உலகுக்கு அருள்சுரப்பது பச்சை வாழியம்மன், ஏற்கனவே தேவர்களால் பூசிக்கப்பட்ட சத்தி, இவளைப்பற்றியும் புராணம் எழுதலாம், இதை ஆராய்ந்தறிந்து எழுத பச்சை வாழி அருள் புரிவாள் என நம்புகிறேன்; தேவர் களும, முனிவர்களும், அடியார்களும் இவளை பூசிப்ப தால் பூசாரிக்குப்பம் என்ற பெயர் அப்பதிக்கே உண்டா கியது.

சோதிக் காட்சி

இவர்களுக்கு முன்னால் சென்ற இடும்பன், வீரன், அய்யனார், மூவரும் ஆண்டிருந்த ஓர் குளிர்ச்சி பொருந் திய சோலையில் தங்கினர். அங்கு பழனியாண்டியை நினைத்து இடும்பன் மனமுருகித் தோத்தரிக்க, அச் சமயத்தே அங்கு ஓர் அழலுருவான சோதிச்சுடர் தோன்றிற்று. அதைக்கண்ட இடும்பன் ஸ்ரீசிவ சுப்ர மணியக் கடவுளின் காட்சி அது என வணங்கி உருகி னன். வீரன் அச்சோதியின் அழகில் ஈடுபட்டுத் துதித்து நின்றான். அவ்வழல் சுவாலை தாளாது அய்யனார் குதிரையைக்கூட விட்டுவிட்டு ஓடி, தெற்குத் திக்கில் கைகட்டி வாய்புதைத்து வணங்கி நின்றார். அப் பொழுது சிவகுமரன் தனது அழலுருவை மாற்றி, கையில் வில்லம்புடனும், விரிசடையுடனும், இடுப்பில் சல்லடத்துடனும். வேட ரூபமாய் வள்ளிக்குக் காட் டிய காட்சியை அனைவருக்கும் காட்டினார். அவ்வமயம் இடும்பனும் வீரனும் தரிசிக்க, அய்யனார் தென் திசையி னின்றும் தோத்தரிக்க, ஸ்ரீசிவ சுப்பிரமணியக் கடவுள்

தமது கடைக் கண்ணால் நோக்கி "அன்பர்களே! இவ்விடம் எனக்குகந்த இடம், தங்கள் களைப்பை இப் பொழுது ஆற்றினதுபோல், உலகத்தோர் களைப்பை இங்கிருந்து ஆற்றுவோம்" என்று கூறியருளினார்.

தேவர்களுக்குக் காட்சி

இவர்கள் சேவித்துக்கொண்டு இங்கிருக்கும் தரு வாயில், ககனமார்க்கமாய் வந்த சப்த. ரிஷிகள் தேவர் கள் தங்கியிருந்த இடத்தில் இறங்கினார்கள். (கன்னி யார் கோயிலில் ஏழு முனிகள் இருக்கின்றனர். திருமால் முருகன் முதலிய அநேக விக்ரஹங்களும உளது.) இறங்கிய முனிவர்கள், எல்லோரையும் நோக்கி, "அன்பர்களே! இங்கிருந்து நோக்குங்கள், நமக்கு முன்னே சென்ற, இடும்பன், அய்யனார், வீரன் மூவருக் கும், ஸ்ரீசிவ சுப்பிரமணியக் கடவுள் காட்சி ஈவதைக் காணலாம். அவர் இப்பொழுது அழலுருவாயிருப்ப தால், இங்கிருந்தே காட்சியைக் காணுதல் நலம், என்று கூற, எல்லோரும் அத்திக்கில் ஓர் பெருஞ் சோதியைக் கண்டு வணங்கி நின்றனர். அவ்வமயத்தில் இடும்பன் அய்யனார், வீரன் முதலியவர்களும், இங்கிருந்த தேவர் களும், ஸ்ரீசிவ சுப்பிரமணியக் கடவுள் தேவியார் களுடன் திருக்காட்சி ஈயவேணுமெனப் பிரார்த்திக்க, அவ்வழலுருவிலேயே ஒரு பக்கம் தெய்வயானை அம்மை யாருடனும், வில்லம்பு, விரிசடை, சல்லடத்துடன், கோலங்கொண்டு மணந்த வள்ளியம்மையாருடனும், விட்டுப் பிரியாத ஒரே நிலையில் காட்சி தந்தருளினார்!

திருவாக்கு

திருக்காட்சி காட்டிய சிவகுமரன், எல்லோரையும் நோக்கி "தேவர்களே! நீங்கள் தங்கிய இடம், மகிமை

பொருந்தியதாக மிளிரட்டும், அந்த இடத்தை நாடி வரும் அன்பர்கட்கும், அவனிக்கும் உங்கள் அருளால் நன்மையாற்றுங்கள் ; அங்கு நீங்கள் இருக்குமிடத்திற்கு இதோ ஒரு நீரோடை வருகிறது, அதுவே சரவணநதி அது புண்ணிய தீர்த்தம்; உலகுக்கு நன்மையளிக்கும் ; (என்று கூறி வேலாயுதத்தை ஊன்ற, ஊன்றிய இடத்திலிருந்து ஒரு நதி புறப்பட்டது. இதனுல் இவ்வூருக்கு "வேல் ஊன்றினுன்பட்டி" என்ற பெயரும் உண்டு) அய்யனுர் என்னுடைய வெம்மைதாளாது தெற்கே போனதால், அவர் நின்ற இடம் செப்ப இளநத்தமாய் (சொல்ல சிறு கிராமமாய்} இருக்கும். அங்கிருந்து உலகுக்கு, அவர் இன்னருள் பாலிப்பாராக ! அவர் வந்ததற்கடையாளமாய், இப்புரவி இங்கிருந்து இப்புவிக்கு நலன்கள் ஆற்றுமாக ! வீரனருள் வேலே குழுலகில் ஓங்குமாக !. நான் வில்லுடனும் அம்புடனும் தோன்றியதால் இப்பதி "வில்லுடையான்பட்டி" என உலகத்தார் புகழ்ந்துபோற்ற ஒளிரட்டும் ! என்று திருவாய் மலர்ந்தருளும்போது பிரதிட்சணம் வந்து கொண்டிருந்தான் இடும்பன், வடக்குத் திக்கில் வந்ததும் "இடுமபா" எனக் கூப்பிட்டனர் குறென். இடும்பன் அங்கேயே கைகட்டி வாய்புதைத்து நின்ருன்! சிவகுமரன் "இடும்பா! நீ வந்ததற்கடையாளம், உன்பாதங்களே நீ நின்ற இடத்தில் அழுத்தி ககனமார்க்கமாய் பழனிக்குச் செல், உன் பாதச்சுவடு நம் திருக்கோயிலுக்குப் பக்கத்தில் வடக்கே இருப்பதாக, நாம் இங்கு பழையபடி தோன்ற நீண்ட காலமாகும்; தேவர்கள் படையாட்சிக்காரனுகிய என்னே, இவ்வுலகத்துப் படையாட்சி இனத்தார்கள் தெரிந்து திருக்கோயில் உண்

டாக்கி அருட்பணி புரிய அருள் செய்வோம்! அதுசமயம், பிரதிதினமும் அர்த்த சாமத்தில், நீயும் போகரும், வாசுகியும், இவண்வந்து நம்மைத்தொழுது தரிசனம் செய்வீர்களாக!" என்று திருவாய் மலர்ந்தருளி ஒளி உருவத்திலிருந்து, வள்ளி தெய்வயானை சமேதராக வில்லம்பு விரிசடை சல்லடத்துடன் வேட உருவோடு ஓர் கல்லுருவாய் பூமிக்குள் மறைந்தார்! கழுகாசலத்திலும காட்சிக் கடவுளானர்.

திருக்கோயில்

சுமார் முந்நூறு வருடங்களுக்கு முன் படையாட்சி வம்சத்தில் தோன்றியவரும், திருவானைக்கோவில், ஸ்ரீரங்கம், முதலிய தலங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்து துதித்து வந்தவரும் சிவலிங்கம், ஜம்புலிங்கம் என்ற பெயர்களை உடையவருமான, படையாட்சி அன்பர் ஒருவருக்கு வீடு, மாடு, காணி, கலை, முதலிய எல்லாச் செல்வங்களும் இருந்தன; கடவுள் பக்தியிற்சிறந்த அன்னருடைய பசுக்கள் வயிறார மேய்ந்து, ஸ்ரீ சிவ சுப்ரமணியக் கடவுள் மறைந்த இடத்தில் பாலைச் சொரிந்தன; இதை அறியாது இருந்த படையாட்சியாரும், அவருடைய சனங்களும், மாடுகள் பால்கறவாமல் இருப்பதை அறிந்து ஆராய்ச்சிசெய்து, பசுக்கள் பால் சுரந்த இடத்தைச் சோதனைசெய்ய, கடப்பாரை, மணவெட்டி முதலிய ஆயுதங்களைக்கொண்டு தாக்கினர். அவ்விடத்தே இருந்த ஒரு கருங்கல்லின் மீது மணவெட்டி பட்டமாத்திரத்தில் சிறிது ரத்தம் பீறிட்டது அதுகண்டு அஞ்சி அவர்கள் கரங்களாலே அவ்விடத்தைத் தோண்டிப்பார்க்க; மறைந்த ஸ்ரீ சிவ

சுப்ரமணியரின் கருங்கல்லுரு, தோளில் சிறிது காயத்துடன், ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேதராக வில்லம்பு விரிசடை சல்லடங்கொண்ட வேட உருவத்தோடு தெரிந்தது, அந்த இடத்தில் திருக்கோயில் கட்ட ஏற்பாடுசெய்யும் யோசனையுடன், அன்றிரவு எல்லோரும் கூட்டம்கூடி யோசனை செய்து விட்டுக் கலைந்தனர்; தம் இல்லிற்கேக, திருவானைக்கோயில் சிவபெருமான் ஸ்ரீ ஜம்பு லிங்கேஸ்வரர், படையாட்சியார் கனவில் காட்சி ஈந்து "கோயில் திருப்பணி வெற்றியாக நடக்கும், அக் கோயிலில் கிழக்குதிக்கில் நாமும் எழுந்தருளியிருப்போம், உல்குக்கு அருள் சுரப்போம்" எனக்கூறி திருவுருக்கரந்தனர்; அக்காலத்தில் ஏற்பட்ட திருக்கோயிலே வில்லுடையான் குடிகொண்ட வில்லுடையான் பட்டி.

தலமான்மியம்

இந்தத்தலம் வடலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கே நான்காவது மைலில் உள்ளது, இது மிகவும் பெருமைவாய்ந்த ஒருதலம், ஒரு நிலை மனதுடன் வேண்டியவர்களுக்கு, வேண்டிய அருள்கொடுக்கும். "வேலனை நம்பினோர் வேதனைப்படார்" என்பது, வில்லுடையான்பட்டி முருகனின் அபய அருள்! இந்தத் தலத்தை நினைப்பவர்களுக்கும், கனவில் காண்பவர்களுக்கும், நேரில் வந்து, பிரதட்சணம், தரிசனம், காவடி எடுப்பு, அபிஷேகம், அர்ச்சனை, துதி, உபயம், திருப்பணி முதலியன செய்பவர்களுக்கு கஷ்டங்கள் நீங்கி கந்தன் அருள் உண்டாகியிருக்கிறது. அவர்கள் வாழ்வு மென்மேலும் ஓங்கியிருக்கிறது; இகபரசாதனங்களை எளிதில் அடை

வார்கள்! வளவனூர் ஸ்ரீ. அண்ணுமலை செட்டியார் அவர்கள் வகையருக்களால், நவக்ரஹக்கோயிலும், கூடலூர் ஸ்ரீ ந. முத்துசாமி செட்டியாரவர்கள் துணைவியாரால் மண்டபமும், சென்னப்ப நாய்க்கன் பாளையம் ஸ்ரீ. ராஜகோபால் செட்டியாரவர்கள் மூதாதையர் காலத்திலிருந்து தளவரிசைப்பணிகளும் நடந்திருப்பதாகத்தெரிகிறது. இன்னும் பல பேரன்பர்களால் உபயம், திருப்பணி முதலியன சிறிது சிறிது நடந்துவருகிறது. இப்பொழுது கோயில் ஏழ்மை நிலையிலிருக்கிறது. உபயங்கள், திருப்பணிகள் நடக்கவேண்டும். குறிக்கப்பட்ட விழாக்கள் நடைபெறவேண்டும்.

வேண்டுகோள்

இதைக்கண்ணுறும் அன்பர்கள்!

“நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல்லருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்”

என்ற பாரதியாரின் வாக்குக் கிணங்க, அவரவர்கள் சக்திக் குகந்தவண்ணம், வில்லுடையான்பட்டிக் கோயிலுக்கு வேண்டிய உபயங்களையும், திருப்பணிகளையும், ஆற்ற உதவிசெய்து முருகக்கடவுளின் திருவருளுக்குப் பாத்திரராவார்களாக! இக்கோயில் சம்பந்தமாக உதவி செய்பவர்களின் பெயர்களை அடுத்த பதிப்பில் பிரசுரம் செய்யப்பெறும்.

அன்பு,

ஸ்வாமி ஸ்ரீ வளையாபதி சாந்தயோகி

இக்கோயிலுக்கும், இடும்பன், வீரன், அய்யனர்' முதலிய இதர தெய்வ நிலயங்களுக்கும் கௌரவ தர்ம கர்த்தர்களாய் தொண்டாற்றும் அன்பர்கள்,

T. வீராசாமி ரெட்டியார் டிரஸ்டி
R. சாம்பசிவ நாயுடு டிரஸ்டி
M. D. கிருஷ்ணரெட்டியார்,
மானேஜிங் டிரஸ்டி.

திருவிழா விபரங்கள்

சித்திரை மாதம்	வருஷப் பிறப்பு விழா
வைகாசி மாதம்	வசந்த உற்சவம்
ஆனி மாதம்	திருமஞ்சனம்
ஆடி மாதம்	கிருத்திகை விழா [விழா
ஆவணி மாதம்	அகஸ்தியருக்கு உபதேச
புரட்டாசி மாதம்	நவராத்திரி, அம்புபோடல்
ஐப்பசி மாதம்	கந்தசஷ்டி, சூரசம்ஹாரம்
கார்த்திகை மாதம்	தீபம் சோதிவிழா
மார்கழி மாதம்	காட்சி விழா
தை மாதம்	அருணகிரி, நக்கீரர், பகழிக் கூத்தர், முதலியவர்களுக் கு உபதேசக்காட்சி விழா.
மாசி மாதம்	மகம்
பங்குனி மாதம்	உத்திரம், பிரம்மோற்சவம்

பக்கத்து ஸ்தலங்கள்

வடலூர், அதன் பக்கத்தில் சேப்பிளா நத்தம் என் கிற செப்ப இளநத்தம், அய்யனர் கோயில் தரிசிக்க வேண்டிய ஓர் முக்கிய தலம். வில்லுடையான் பட்டிக்

குக் கிழக்கே 4-வது மைலில் கன்னியார் கோயில் என்கிற பூசாரிக்குப்பம், இங்கு எல்லாத் தேவர்களும் உளர். சிதம்பரம் அன்பர் ஒருவரால் திருப்பணி நடந்துவருகிறது; இங்கு ஆதிசத்தியாய் கோயில்கொண்டு குவலயத்திற்கு அருள்சுரப்பது பச்சைவாழி அம்மன், மிகவும் மகிமை தங்கிய சத்தி. இத்தலத்தைப் பற்றி தெரிந்துகொள்ள இவ்வம்மை அருள்புரிவாளென நம்புகிறேன். இத்தலத்திற்குச் சமீபமாயுள்ளது குறிஞ்சிப்பாடி, இவ்வூர் மாரியம்மன் மிக மிக சக்தி வாய்ந்தவள் ; உலகோர் புகழும் இவள் மகிமையை யாரே எழுதவல்லார்? அன்பர்கட்கருள்சுரக்கும் ஆதிசக்தி வாழ்க!

"அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே!
எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!"

"அன்பின் வழியதுயிர்நிலை
அஃதிலார்க்கென்பு தோல்போர்த்த வுடம்பு"

சுபம்.

N. B. காகித விலையேற்றத்தால் புராண விளக்கம் சுருக்கிக் கூறப்பெற்றது.

"அருவமுமுருவமு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பனிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலகமுய்ய"

—கச்சியப்ப சிவாச்சாரியார்.

குன்றமெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலையபூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத்துறை —நக்கீரர்.

கத்துத்தரங்க மெடுத்தெறியக்
கடுஞ்சூலுளைந்து வலம்புரிகள்
கரையிற்றவழ்ந்து வாலுகத்திற்
கான்றமணிக்கு விலையுண்டு
தத்துங்கரட விகடதட தந்திப்
பிறைக்கூன் மருப்பில் விளை
தரளந்தனக்கு விலையுண்டு
தழைத்துக்கழைத்த வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத்தினுக்கு விலையுண்டு
கொண்டற்று நித்திலந்தனக்குக்
கூறுந்தரமுண்டுன்கனி வாய்
முத்தந்தனக்கு விலையில்லை
முருகா முத்தந்தருகவே
முத்தஞ்சொரியும் கடலலைவாய்
முதல்வா முத்தந்தருகவே.

எள்ளத்தனை வந்துறுபசிக்கு
மிரங்கிப்பரந்து சிறுபண்டி
யெக்கிக் குழைத்து மணித்துவர்
வாயிதழைக் குவித்துவிரித்தழுது
துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டிலுலைந்துபெரு விரலைச்
சுவைத்துக் கடைவாய் நீரொ
ழுகத்தோளின் மகரக்குழை தவழ

மெள்ளத்தவழ்ந்து குறுமூரல்
விளைத்துமடியின் மீதிருந்து
விம்மிப்பொருமி முகம்பார்த்து
வேண்டுமுமையாள் களபமுலை
மள்ளத்தமுதுண்டக மகிழ்ந்த
மழலைச்சிறுவா வருகவே!
வளருங் களபக்குரும்பைமுலை
வள்ளிகணவா வருகவே!

பேராதரிக்குமடியவர்தம் பிறப்பை
யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங்கொடுக்கவரும் பிள்ளைப்
பெருமானென்னும் பேராளா
சேரா நிருதர்குலகலகா சேவற்
கொடியாய் திருச்செந்தூர் தேவா
தேவர் சிறைமீட்ட செல்வா
வென்றுன் திருமுகத்தைப்
பாராமகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவாவா வென்றனைப் போற்றப்
பரிந்துமகிழ்ந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக்குமுண்டோ
வடிவேன் முருகா வருகவே
வளருங்களபக் குரும்பைமுலை
வள்ளிகணவா வருகவே!

—பகழிக் கூத்தர்.

திருப்புகழ்

இத்தாரணிக்குள் மனுவித்தாய் முளைத்தழுது
கேவிக்கிடந்து மடிமீதிற்றவழ்ந் தடிகள்
தத்தா தனத்ததன இட்டேதெருத்தலையில்
ஓடித்திரிந்துநவ கோடிப்ரபந்தகலை
இச்சீர் பயிற்றுவய தெட்டோடு மெட்டுவர
வாலக்குணங்கள்பயில் கோலப்பெதும்பையர்கள்
உடனுறவாகி !
இக்கார் சரத்துமதனுக்கே யிளைத்துவெகு
வாகக்கலம்பவகை பாடிப் புகழ்ந்துபல
திக்கோடு திக்குவரை மட்டோடி மிக்கபொருள்
தேடிச்சுகந்த அணை மீதிற்றுயின்றசுகம்
இட்டாதரத்துருகி வட்டார்முலைக்குளிடை
மூழ்கிக்கிடந்துமய லாகித்துளைந்துசில
பிணியதுமூடி !
சத்தானபுத்தியது கெட்டே கிடக்கநமன்
ஓடிந்தொடர்ந்துகயி ருடிக்கொளும்பொழுது
பெற்றோர்கள் சுற்றியழ உற்றார்கள் மெத்தஅழ
ஊருக்கடங்கலிலர் காலற்கடங்க உயிர்
திக்காதி வர்க்குமய னிட்டான் விதிப்படியின்
ஓலைப்பழம்படியி னுலிற்றிருந்ததென
எடுமெனலோடி !
சட்டாநவப்பறைகள் கொட்டாவரிச்சுடலை
ஏகிச்சடம்பெரிது வேகப்புடஞ்சமய
இட்டே யெனற்குளரி பட்டாரெனத்தழுவி
நீரிற்படிந்துவிடு பாசத்தகன்றுனது
சற்போதகப்பதும் முற்றே தமிழ்க்கவிதை
பேசிப்பணிந்துருகு நேசத்தையின்றுதர
இனிவரவேணும் !

தித்தாதி ரித்திகுட தத்தா தனத்தகுத
தாதத்தனந்ததன தானத்தனந்ததன
செச்சே செகுச்சசகு குதித்தாதிமித்ததகு
தாதத்த செந்திகுத தீதத்த செந்திருக
தித்தா கிடக்கணக டக்காகு குக்குகுகு
தோதக்கணங்கணக கூகிக்கிணங்கிணன
ஒரு மயிலேறி !
திட்டேரரத்தசுரர் பட்டேவிழப்பொருது
வேலைத்துளைந்துவரை ஏழைப்பிளந்துவரு
சித்தாபரத்தமரர்க் கத்தாகுறத்திமுலை
மீதிற்புணர்ந்துசுக லீலைக் கதம்பமணி
சுத்தா உமைக்குமொரு முத்தாய் முளைத்தகுரு
நாதக் குழந்தையென ஓடிக்கடம்ப மலர்
அணிதிருமார்பா !
மத்தாமதக்களிறு பிற்றானுதித்தகுக
னேதத்திலங்கையினி லாதிக்கமுண்டடொரு
முட்டாளரக்கர்தலை இற்றேவிழக்கணைகள்
ஏதொட்ட கொண்டலுரு வாகிச் சுமந்ததிக
மட்டார் மலர்க்கமல முற்றாசனத்திருவை
மார்பிற்புணர்ந்தரகு ராமர்க்குமன்புடைய
மருமகனாகி !
வற்றாமதுக்கருணை உற்றே மறைக்கலைகள்
ஓதித்தெரிந்துதமிழ் சோதித்தலங்கலணி
அத்தா பரத்தையரி வித்தாவிசுற்றுமொளி
ஆகிப்ரபந்தமணி வேல்தொட்டமைந்தபய
வர்க்கா மருப்புழுகு முட்டாதி ருப்பழனி
வாழ்வுக்குகந்தடிய ராவிக்குள் நின்றுலவி
வருபெருமாளே !
—அருணகிரிநாதர்

வில்லுடையான் புகழ்

நீல மாமயில் குகூ குகூ வென
நீள வேலொளி பளீர் பளீர் என
நீறு பூச்செழில் வெளேல் வெளேல் என
வெகுசோபா!
நீர ணிச்சிவன் சுதா சுதா மஹா
நீலி யம்பிகை சதா சதா புகழ்
நீதி மைந்தனே ஹரா ஹராஎன இசைகூற!
கோல க்கோழியே கொக்கோ ரக்கோவென
கோதைக்குஞ்சரி ரமா ரமாவென
கோவை வள்ளியே குஹா குஹாவென துதிபாட!
கோதிலாபத்தா ஐயா ஐயாவென
கோரச் சூரரே சரண் சரணென
கோரி டுஞ்சித்தர் குரு குருவென
அருள்வோனே!
சீல வில்லுடை யானே கோனேயென
சீதச்சல்லட தாரி வாரியென
சீரடிச்சதம் நமோ நமோவென
வருவோரை!
சீவ காருண்ய முற உற வந்து
சீட ராக்கியே நலம் நலம் மிக
சீக்கி ரமேதரு க்ருபா கராவுமை மறவோமே!
பால ஷண்முக சாமி சாமியென
பார காவடி தினம் தினம் வர
பால பிஷேக மோகா யோகாததி வருவாயே!
பாட வளையா பதி துதிதினம்
பாரிலென்றுமே சுகம் சுகம்தரு
பாணவில்லொடு விரி சடையுள திருவேளே!

ஓம் சுத்த சக்தி

அலங்காரக் கும்மி

ரத்தினக்ரீடங்கள் மின்னுதடி—நல்ல
ரம்மியம் ததும்பியே பொங்குதடி
சித்திரமயமான குண்டலங்கள்—மிகச்
செவ்விய செவிகளிலாடுதடி 1.

வலம்புரிச் சங்கெனுங் கழுத்தினிலே—பல
வர்ணங்கள் வீசிடும் மாமணிகள்
பலமான தோட்களின் மாலைகளில்—பூக்கள்
பந்துகள் போலல்லோ உருளுதடி 2.

கார்முகில் போன்றவக் கூந்தலிலே—நல்ல
கதம்பங்கள் வாசனை வீசுதடி
மார்பினில் சரப்பளி பதக்கத்துடன்—மண
மந்தாரைமல் லிகை மாலையடி 3.

முத்துடன் மோஹரா ருத்திராட்சம்—மன
மோஹனத்தாவடஞ் சங்கிலியும்
உத்தமப் பவழச் சோழிகளும்—பல
ஒய்யாரச் சரங்களாய்க் காணுதடி 4.

கண்ணைக் கவர்ந்திடுங் கவசங்களும்—கூர்
கத்திகள் கேடய ஆயுதங்கள்
விண்ணை யிடித்திடும்விஸ்வரூபம்—காண
வேண்டுமே பற்பலக் கோடிக்கண்கள் 5.

நெற்றியில்வி பூதிப்பூச் சழகும்—பல
நிறநிற ஒளியுள்ள பொட்டுகளும்
வெற்றி சேர்வேலுடை மின்மினுப்பும்
வியப்புடன் புகழவே தோணுதடி 6

பட்டாடை கட்டிய இடுப்பழகும்—அதிற்
பதிந்துமே யொளிர்ந்திடு மணியழகும்
கட்டரு தேகத்தின் காந்தியையும்—காண
கண்களுங்கூசுது காரிகையே 7.

நளினமாமலர்த் தாட்களிலே—சுடர்
நடமிடுக்கின் கிணிச்ச தங்கைகளும்
களிப்புட னேடியே தொழுபவர்க்கு—மிகக்
கடாட்சித்தருளும் காட்சிகளே 8.

பாலுபஞ் சாமிர்தஅபி ஷேகமாம்—நல்ல
பத்தர்கள் காவடியாட்டங்களாம்
சீலமாய்ச் சங்குசே கண்டிகளும்—பல
சிங்கார வாத்யங்க ளோசைகளாம் 9.

வள்ளிதெய்வானை சமேதராக—கோழி
வனப்புக் கொடியைத்தாங் கிக்கொண்டு
புள்ளிமயின்மீது ஏறிநிற்கும்—அந்தப்
புண்ணியமுரு கனைவாழ்த்துங்கடி 10.

வீரவாகுத்தோள் ஸ்நேகனடி—தமிழ்
விஸ்வாச நக்கீரன் நேசனடி
சூரனைவென்றிட்ட வேலனடி—நம்
சுப்பிரமணியன் ராஜனடி 11.

சேவலைக்கொடி யிலேசேர்த்தவண்டி—நம்மைச்
சேவகனுகவே காப்பவண்டி
ஆவலாய் வேண்டிட வந்திடுவான்—நல்
லதிர்ஷ்டவாழ் வுகள்தந்திடுவான் 12.

சத்துச் சித்தானந்தச் சமுத்திரத்தில்—பெருஞ்
சத்தியாய்க் பிளம்பிடு மாமணிபோல்
வித்துவ விஞ்சையின் ஷட்கோணத்தில்—வேலன்
வித்தக உள்ளொளி யாகிநிற்பான் 13.

நாக்குக்கினிய நமசிவாயமும்—நன்
நாரணன் மகிழ்ந்திடு கோவிந்தமும்
வாக்குக்கினிய ஷடாட்சரமும்—அந்த
வாலையின் பிள்ளையின் மந்த்ரமடி 14.

வில்லுடையான்பட்டிச் சீலனடி—மிக
வித்தாரப்புகழுடை வீரனடி
நல்லருள் தந்துமே காப்பனடி—நாம்
நம்பிட நற்சேமமாகுமடி 15.

குயிற் கண்ணி

வில்லுடையான் பட்டிவளர்
விரிசடைக்காரனையே
சொல்லச் சொல்ல என்மனமே குயிலே
சொக்கி யுருகுதடி! 1.

விண்ணவர் தலைவரேறை
விடிய விடியத்தேடி
கண்களுஞ் சோருதடி குயிலே
கால்கள் தள்ளாடுதடி! 2.

மாலையே வாரே னென்று
மயக்கியே முத்தமிட்டு
வேலையே தொட்டு சத்யம் குயிலே
வேணது செய்தானடி! 3.

சாமிக்குச் சத்தியமே
சர்க்கரை பால் தயிரோ
காமிநான் நம்பினேண்டி குயிலே
கண்மூடித் தனமதாயே! 4.

பத்தர் களகத்தினுள்ளோ
பரத்தையர் மோகத்திலோ
சித்தர்கள் லீலையிலோ குயிலே
சேவகன் ஞாபகமே! 5.

காவடி யாட்டத்திலோ
கணிகையர் கூட்டத்திலோ
தேவர்கள் நாட்டத்திலோ குயிலே
தேவனின் சிந்தையது! 6.

காடு கரைபோனு லென்ன
காசுபணம் போனுலென்ன
தேடுவேனவனை யின்னும் குயிலே
தேகமிருக்கும் வரை! 7.

ஆறுமுடி களுடை
ஆனந்தமுகங்கள் காண
பீறிட் டடிக்குதடி குயிலே
பேதை மனத்திலாசை! 8.

ஈராறு தோள்களிலே
என்னிரு தனம்புதைத்து
சீராட்டுங் காலத்தையே குயிலே
சீக்கிரம் நாடுரண்டி! 9.

புன்னகை தவழ்ந்திலங்கும்
புதுமலர் முகங்களாறும்

என்னகக் கண்ணினிலே குயிலே
இன்னொளி வீசுதடி! 10.

பன்னிரு கரங்களுடை
பார்வதி புத்திரனை
உன்னியே வாடுகின்றேன் குயிலே
ஓர் துணை இல்லையடி! 11.

மாதவர் நேசனையே
மனத்துளேத் யானிக்கவே
காதலும் பொங்குதடி குயிலே
கட்டுகள் மீறியிப்போ! 12.

வருவானோ வாரானோடி
வந்தின்பந் தருவானோடி
திருமுகங் காணுவேனோ குயிலே
திருப்தியேபூ ணுவேனோ? 13.

தோகை மயிலின்மேலே
தோன்றுது ஆறுருவம்
வாகை வேலா யுதமே குயிலே
வந்திங்கே தோணுதடி! 14.

கண்டேன் கண்டேனடி
கண்ணார நாதனையே
கொண்டேன் கொண்டேனடி குயிலே
கோதைநல் யோகத்தினை 15.

சிந்து

வில்லுடையான்பட்டி வளர் வீரனடி கூடு !
அவன்—வெற்றி வேலேநாடு ! நல்
விகசிதமாச் சிந்துகளில் விரிபுகழே பாடு ! 1

அம்புவில்லேக் கைப்பிடித்த அழகுதுரைசாமி !
அவன் - அவனிக்கீர்த்தி நாமி ! மிக
அன்புபூண்ட அடியவர்க்கு அருள்சுரக்கும் நேமி ! 2.

சல்லடத்தைக் கட்டி நிற்கும் சற்குணமா சோபன் !
அவன் - சகலமூர்த்திரூபன் ! மிகச்
சற்சனரினகங்களிலே சார்ந்திலங்கு தீபன் ! 3.

வள்ளி தெய்வயானேயோடு விளங்கு சுப்ரமண்யன் !
அவன் - வரங்கள்தருங் கண்யன் ! இந்த
வையகத்தா ருய்வதற்கே வந்தபெரும் புண்யன் ! 4.

வீணரான சூரர்களே வேரறவே வாட்டி !
புவி - வேதனே களோட்டி ! நல்ல
வேட ரூபந்தாங்கி திருவே தருவான் பேட்டி ! 5.

பளபளக்கும் பச்சைமயில் பரிந்துபுகழ் கோலன் !
மஹா - பரமனுக்குப் பாலன் ! குற
பாவை வள்ளி தெய்வயானே பாடிப்புகழ் லோலன் ! 6.

அருணகிரி அண்ணுமலே அற்புதப்பாச் சொல்லன் !
இந்த - அவனிக்கொரு செல்லன் ! பல
அடியவர்கள் மனங்களிக்க அருள்வதிலே நல்லன் ! 7.

வள்ளலாரின் கண்ணுடியில் வந்திலங்கு நேயன் !
நல்ல - வன்னத் தமிழ்வாயன் ! மிக
வணங்கிவந்த பத்தர்கட்கு வலிந்தருள்சகாயன் ! 8.

சட்கோணத்தில் சந்தோஷமாய் சார்ந்திருக்கும் தீரன் !
எழில் - சண்முகத்தான்வீரன் ! உயர்
சகல கலைத்தெய்வமான சத்தி புத்ரச்சூரன் ! 9.

பைந்தமிழ்த்தாய் மடியினிலே பதிந்தவிசுவாசன் !
நல்ல - பத்தர்களின்நேசன் ! சிறு
பையல் வளையாபதியின் பாக்கள் சூடுமீசன் ! 10

இகபர சாதனங்களை இனிய எளிய நடையிற்காட்டும் இன்னமுத நூல்கள், "திருவருட்பா" சமரச சுத்த சத்திய சன்மார்க்க சங்கம் இருக்கும்' இடங்களிலும் பிரபல புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும் தேசிய கவி, ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் இயற்றிய கவிதைகள், கட்டுரைகள், கீதை, முதலியவைகளும், ஸ்ரீ. வ. வே. சுப்ரமணிய அய்யர் அவர்கள் எழுதிய, மங்கையர்க்கரசியின் காதல், குப்பன் பித்தலாட்டங்கள், சந்திரகுப்த சக்ரவர்த்தி, முதலிய நூல்களும், பிரபல புத்தக வியாபாரிகளிடம் கிடைக்கும், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் இயற்றிய, "முருகன்" "பெண்ணின் பெருமை" "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" முதலிய நூல்களும் இன்னும் பல நூல்களும், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், 12 கணபதி முதலித் தெரு, ராயப்பேட்டை, சென்னை, என்ற விலாசத்தில் கிடைக்கும். தமிழ் முனிவர் ஸ்வாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதிய, பைந்தமிழ்ச் சோலை, இன்பமாலை, புது யுகப்பாட்டு திருநூல் அல்லது தூயவாழ்வு, யோக சித்தி, சிவஞான தீபம், திருக்குறளின்பம், முதலிய நூல்களும் இன்னும் பல நூல்களும், அன்பு நிலையம், இராமச் சந்திரபுரம், திருச்சினப்பள்ளி ஜில்லா (வயா திருமயம்) என்ற விலாசத்தில் கிடைக்கும்.

இந்நூல்கள்
படிப்பர் வாயினிக்கும் பார்ப்பவர் கண்ணினிக்கும்
நடிப்பவருயிரினிக்கும் நற்செவி கேட்டினுக்கும்!

ஸ்வாமி ஸ்ரீ வளையாபதி சாந்தயோகி

ஓம் சுத்த சத்தி

திருக்கூடலை யாற்றூர்

ஞானசத்தி துதி

எழில்

கோலச்சுட ரோளியே--விமலா
கோமளமாமலரே !
சீலத்தமி ழொலியே--விமலா
சீதளப் பொற் கொடியே !
பாலொத்த வெண்ணகையால்--எங்கள்
பாவங்கள் போக்கி விடு !
ஞாலத்து ஞானசத்தி—தெய்வ
ஞாயத்துத் தத்துவமே ! 1.

ரஞ்சித மாமணியே--சுவையில்
ரம்மியத் தீங்கனியே !
குஞ்சித பாதத்துடன்—சத்திநீ
குதித்து ஆடையிலே
கொஞ்சிடுஞ் சேயெனையே—அணைத்துக்
கொடுப்பாய் முத்தங்களே !
தஞ்சமே ஞானசத்தி—உனது
தண்மலர்த்தாள் களுக்கே ! 2.

பாடவுங் கூடுமோடி—உனது
பாரப் புகழ்களெலாம் ?
நாடவருள் தருவாய்--குண்டலி
நாதத்தி னோசையிலே !
கூடலையாற்றூரிலே—எழிலாய்க்
கோயிலைக் கொண்டவளே !
தேடற்கரியவளே—என்னம்மா
தேவியே ஞானசத்தி ! 3.

சாகாத்தலை தனிலே—அடியேன்
சாஸ்வத மாயிருக்க!
வேகாக் காலதிலே—இன்பம்
வேணதை நான் பெறவே!
போகாப் புனல்வாழ்வில்—வரும்
போகத்தை நானுறவே!
ஏகப் பொருள்ஞான—சத்தி
ஏழைக்குத் தந்துவிடு! 4.

நத்தித் தனித்திருந்த—எனக்கு
நற்காட்சி காட்டி விட்டாய்
புத்தி விழித்திருந்த—நிலைக்கே
போதனை செய்து விட்டாய்
பத்திப் பசியினிலே—மென்முலைப்
பாலையு மூட்டி விட்டாய்
இத்தரை மாந்தரெல்லாம்—என்போல்
இன்பத்தி லாழச் செய்வாய்! 5.

இச்சையின் சத்தியடீ—அம்மநீ
இணையிலாச் சத்தியடீ
அச்சமி லாக்கிரியா—சத்திநீ
அன்புரு வானவடி
இச்செக ஞானசத்தி—நீயே
இன்னல்கள் தீர்ப்பவடி
பச்சைப் பசுந்தளிரே—வளையா
பதிக்குத் தாயுறவே! (கோ) 6.

காட்சி

சூரியச் சுடரொளியே ஞானசத்தி—புவி
சூக்குமச் சோதிரூபி ஞானசத்தி
வீரியவடிவ முள்ளாள் ஞானசத்தி—ஒலி
வீணையேந்தும் வாணியவள் ஞானசத்தி! 1.

தாமரைப் பூவிலுறை ஞானசத்தி—உலகத்
தாவர வர்க்கமெல்லாம் ஞானசத்தி
மாமறை முழக்கமெல்லாம் ஞானசத்தி—இந்த
மாநிலத் தோற்றமெல்லாம் ஞான சத்தி! 2.

சாந்தமதித் தண்முகத்தாள் ஞானசத்தி—அதைச்
சார்ந்திருக்கும் தாரகைகள் ஞான்சத்தி
காந்தமிகு தீயுருவம் ஞானசத்தி—வான்
கார்காற்று மாகடலும் ஞானசத்தி! 3.

காணுமிடங்களெல்லாம் ஞானசத்தி—நின்
காதலொளி வீசுதடி ஞானசத்தி
தோணும் பொருள்களெல்லாம் ஞானசத்தி—நின்
தோற்றத்தையே காட்டுதடி ஞானசத்தி! 4.

ஆழிசூழுலகமெல்லாம் ஞானசத்தி—உன்!
ஆட்டமென்று சொல்லிவிட்டாய் ஞானசத்தி
வாழியென்று முத்தமிட்டாய் ஞானசத்தி—தமிழ்
வாகைக்கவி மாலைதந்தேன் ஞானசத்தி! 5.

சாற்றிக்கொண்டு என்னுளத்தே ஞானசத்தி—நீ
சாஸ்வதமாய் நின்றகோலம் ஞானசத்தி
போற்றிடு வோர்க்கருள்புரிவாய் ஞானசத்தி-பத்
போதை யுளவன்பரகஞ் ஞானசக்தி. [திப் 6.

கூடலை யாற்றூரிலே ஞானசக்தி—திருக்
கோயிலகொண்டு வாழுமுயர் ஞானசத்தி
பாடும் வளையாபதிக்கே ஞானசக்தி—ஞானப்
பாலமுதை யூட்டிக்காக்கும் ஞானசத்தி 7.

இன்பம்

நல்ல பெருங்காட்சியடா நவராத்திரிக் கொலுபீடம்
வல்ல பராசத்தியவள் வாழ்வுதரு ஞானசத்தி
நவரத்னஞ் சொலிக்குமுடி நவிலவொண்ணு ப்ரகாசம்
யுவமலர்கள் வாசமுடன் உறவுகொளுங் கருங்கூந்தல்
நுதற்பிறையே விற்புருவம் நுண்மலரிதழ்ச்செவிகள்
இதழளினத்தொளிமேவும் இன்பமயக் கன்னங்கள் [யே
கெண்டை விழிப்பார்வையிலே க்ரஹிப்பாளிவ்வுலகினை
அண்டையிலே நின்றிருந்தால் அன்னையருள் நம்மதடா
செவ்விதழின் காந்தியிலே செகத்தை யிழுப்பளடா
அவ்விதழின் முத்தத்துக் ககப்பட்டேன் நான்மகனுய்
மின்னெனத்தெறித்திலங்கும் மென்முறுவல் பூக்கையிலே
பொன்னொளி சேரவள்முகவாய் பூமிக்கோர் சோதியடா
வெள்ளைக்கமலத்தில் வீற்றிருக்கும் பாரதியின்
கொள்ளைக் கலைகளெலாம் கூத்தாடுமவள் நாவில்
சங்குக்கழுத்துடையாள் சாமுத்திரி காலட்சணி
தங்கத்தோள்களுடன் தண்கரமலர்விரல்கள்
பத்திப்பசிமிகுந்தே பணிந்து அழுபவர்க்கு
நத்தித்தொழுபவர்க்கு நற்றெண்டு செய்பவர்க்கு
வந்தித்திருப்பவர்க்கு வாளாயிருப்பவர்க்கு
சிந்தித்திருப்பவர்க்கு செந்தமிழை வளர்ப்பவர்க்கு
தயவோடிருப்பவர்க்கு தாயாய் நினைப்பவர்க்கு
நயவணக்கஞ்செய் வோர்க்கு நல்லடணி புரிவோர்க்கு
உள்ளமொருநிலையுற்று உடல்மறந்தே நல்லபத்தி
வெள்ளத்திடைமூழ்கி வெள்ளைமனங் கொண்டுமிக
விம்மிப்பொருமியழும் விசுவாச அடியவர்க்கு
செம்முலையன் பாலீந்து சேயர்களாய்க் காக்குதிரு

முத்தாரமணிந்திலங்கு முற்ருத மூலக்கன்னி
வித்தார விரிகதிரே வீரிவயிரு லிலேயே
சிங்கஇடைபெற்றசிவை செந்தமிழின் துடிப்புடைத்து
அங்கங்களைத்தாங்கிநின்று அகிலமெலாம்போற்றுதொடை
உலகத்தை ஈன்றவளின் உவமையிலா முழங்கால்கள்
மலர்ப்பதங்களொளிவீச மகிமைதரு நகப்பவழம்
திருவடிகள் கண்டுவிட்டால் தீருமடா நம்பாவம்
குருவடிவாய் நிற்குமடா குவலயத்திலில்லை குறை
மூக்குத்திக்கற்களிலே மும்மூர்த்தி வாசமடா
நாக்கைநீட்டிவிட்டால் நாநிலமே நாசமடா
ஆங்காரக்காளியடா ஆவேச முள்ளவடா
ஓங்காரரூபியவள் ஓசை யொளிக் காளியடா
கோபத்தைக்கொண்டுவிட்டால் குவலயமேதவிடுபொடி
பாபங்கள்செய்பவரை பத்ரகாளி கொன்றிடுவாள்
சேமத்தையேவிரும்பி சேயாக நாமிருந்தால்
ஓமெனுஞ்சத்தியவள் ஓடிவந்து காப்பளடா
என்னுடைய தவக்கனலால் என்னையவள் சித்தனுக்கி
என்மேனி பொன்னுக்கி என்று முயிரழியாது
என்னைத்தனதாக்கி ஏகமென்ற நிலைகாட்டி
அன்னைமகன்வேறில்லாஅருளொளியிற்சேர்த்தணைத்து
கூடலையாற் றூரில்கோயில் கொண்ட ஞானசத்தி
வாடாமலெனைக் காத்து வாழுகின்ருள் ஞானசத்தி !

அருள்

அகரத்திலே அருட்பிழம்பாயாதிவேத நீதியாய்
உகரத்திலே உள்ளொளியாயோதுங்கீத நாதமாய்
மகரத்திலே மகிமையாகி மாதாசாது சோதியாய்
சிகரஞானசத்தியாகி செந்தமிழாய் வந்தனள்! 1.

செந்தமிழாய் வந்தசத்தி செவ்வழலாய் நின்றனள்
சிந்தைக்குள்ளேவாடியென்று சிரங்குனிந்து மைந்தனே
வந்தனைகள் செய்தபின்னர்வடிவு சீதளமாயினள்
அந்தஅன்னைக் கோலங்காட்டி அகத்தில் குடியேறினள் 2.

ஓர்மனமாய் நின்றிலங்க ஓமமுதமருளினள்
சீர்புவன அமுதமீந்து செவ்வொளியே காட்டினள்
ஆர்வமண்டலாமுதம் ஆசையாக ஊட்டியே
நேர்மை ரகசியாமுதம் நேயத்தோடுதந்துமே 3.

மைந்தா! மௌன அமுதமே மௌனயோக நிலையிலே
ஐந்தடக்கி நின்றுவிட்டால் அகப்படுமே சீக்கிரம்
நைந்திடாதே! என்றுசொல்லி நகைமுகத்தைக் காட்டினள்
பைந்தமிழ்த்தாய்ச் சோதியில் பதிந்துவிட்டேன் மோனமாய் 4.

அத்து விதப்படியறிந்து ஆத்மசத்தி வளர்க்கவே
பத்துமூன்றுநிலையடைந்து பாரைவென்று நிற்கவே
தத்திதத்திமேலேமேலே தத்வா தீதங்காணவே
சத்துசித்து ஆனந்தத்தின் சாகரத்தைச்சேரவே 5.

சிறுங்கோடிச்சூரியரைச் சீடராக்கும் பேரொளி
நூறுகோடி சந்திரரை நுகர்ந்திழுக்குந் தண்ணொளி
மாறிடாமாக்கருணையொளி மாதாநல்ல காட்சியே
ஆருதார மேனிலையில் ஆடுஞ்ஞான சத்தியே 6.

ஐயிரண்டுநாடி களிலாரமுத மூறவே
பையவைந்துபுலன்களும் பக்குவத்தைச் சேரவே
உய்யமூன்று சந்தியில் உதயமாகும் பேரொளி
ஐயமில்லை அதுவேநாமே ஆகுஞ்ஞானசத்தியே! 7.

இடகலையிலெழுந்தருளி இன்னெழிலைக் காட்டுவள்
திடதிருவாய்ப்பிங்கலையில் தெய்வநிலை நாட்டுவள்
வடவனலாய்ச் சுழிமுனையில் வல்லசத்தி ஊட்டுவள்!
நடனமிட்டு ஞானசத்தி நம்மைத்தன தாக்குவள்! 8.

ஆத்மதத்வாதீதத்தில் ஆகுஞ்சிவ கர்ணங்கள்
சூத்ரமுப்பத்தாறு என்று சுருதியாக விளங்கியே
கூத்திடவேநிர்மல குருதுரியா தீதத்தில்
நாத்திதிக்குமேழுமே நாலுபத்து மூன்றுமாய் 9.

அஞ்சுமூன்று மெட்டுஎன்று ஆனதொகை கூட்டியே
கொஞ்சு மைம்பத்தோரெழுத்து கோலமிட்ட கூடத்தில்
ரஞ்சிதமாய் நடனமாடும் ரம்யஞான சத்தியே
விஞ்சை மந்த்ரக்காரனுக்கு வேலையீந்த பைங்கொடி 10.

அருள்வடிவாம்கூடலை யாற்றார் ஞானசத்தியே
இருள்கெடவே இன்னொளியாய் இலங்குஞ் ஞானசத்தியே!
மருள்மயக்கந்தீர்த்திடும் மருந்து ஞானசத்தியே!
குருவாயெனையாண்டு கொண்ட கோதை ஞானசத்தியே! 11.

இளைப்பிலாமல்வேண்டுவோர்க்கு இன்பம் ஞானசத்தியே!
களைத்திடாத கண்ணியர்க்கு கருணை ஞானசத்தியே!
சளையாத்தவங்கொண்டவர்க்கு சத்தி ஞானசத்தியே!
வளையாபதி உள்ளொளியாய் வாழுஞ் ஞானசத்தியே! 12.

குறிப்பு :—

திருக்கூடலையாற்றூர், ஞானசத்தி அம்பிகையை தரிசித்துப்பாடிய நாட்கள். சுபானு ஆண்டில் ஆடி மாதம் வெள்ளிக்கிழமை சந்தனக்காப்பு அன்று பாடியது முதற்பாட்டு!

இரண்டாவது, புரட்டாசி மாதம் நவராத்திரி யன்று பாடியது!

மூன்றாவது, ஐப்பசி மாதம் அன்னாபிஷேகத்தன்று பாடியது!

நான்காவது, கார்த்திகை மாதம் தீபத்தன்று பாடியது!

வளையாபதி

N. B.—பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவர்களின் "உபதேசமொழிகளை"ப்படியுங்கள்,

கிடைக்குமிடம்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர், மதராஸ்.

THE B. N. PRESS, MADRAS.